Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல் மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

✲ பல் கட்டுவதற்கும்,
✲ பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
✲ இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-1761)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 22 (14.03.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :166

புலிகளின் பகுதி வாக்காளருக்காக

# சூனியப் பிரதேசத்திலேயே வாக்களிப்பு நிலையங்கள்!

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக, படையினரதும், புலிகளதும் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும் இடைப்பட்ட பகுதியான யுத்த சூனியப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு தேர்தல் ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.**

இது தொடர்பாக ஆணையாளர் அலுவலகத்தில் அரசியற்கட்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரோடு கலந்துரையாடலை நடத்திய பின்னரே இந்தமுடிவு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவினால் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தெரி வித்துள்ளதாவது-

யுத்த சூனியப் பிரதேசத்திற்குள் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் இந்தப் பகுதிக்குள் படையினரோ புலிகளோ வரக்கூடாது.

யாராவது வாக்களிப்பு நிலையங்களில், குழப்பங்களை விளைவித்தால் அந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு படையினர் பாதுகாப்பினை வழங்குவர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் கட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி விபத்தில் ஆங்கில ஆசிரியர் பலி!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

பரந்தனிலிருந்து மல்லாவி நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்றும், கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதிக் கொண்டபோதே இந்த விபத்து இடம் பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இன்னொரு யுத்தத்தை எதிர்கொள்ள படையினரிடம் மனோ பலம் இல்லை!

## முன்னாள் படையதிகாரி மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க

(கொழும்பு)

மீண்டுமொரு யுத்தம் நாட்டில் ஏற்படுமானால் அதற்கு முகங்கொடுத்து, யுத்தம் செய்யும் நிலையில் படையினரின் மனோநிலை இல்லை என முன்னாள் இராணுவ உயரதிகாரியும் குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளருமான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே சரத் முனசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவ உயரதிகாரியாகப் பணியாற்றியவன் என்ற அடிப்படையில், இன்னொரு யுத்தத்துக்கு படையினரின் மனோநிலை தயாராக இல்லை என்பதை உறுதியாக தெரிவிக்க முடியும்.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த ஜெயசிக்குறு என்ற பெயரில் மூன்று வருடங்களாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதற்காக கடற்படையினரையும், விமானப்படையினரையும் காட்டில் போராடச்செய்து படையினரைக களைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

புனர்வாழ்வு நிலையத்தில்

## வயது குறைந்த 11 பேர் புலிகளால் ஒப்படைப்பு!

(கிளிநொச்சி)

பொய்யான தகவல்களைத் தெரிவித்து புலிகள் இயக்கத்தில் இணைந்த பதினொரு பேர் நேற்று புனர்வாழ்வு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தினால், இயக்கத்தில் இணைந்த வயது குறைந்தோர் தொடர்பாக ஆராய்வதற்கென அமைக்கப்பட்ட விசேட குழுவின் தலைவரான கந்தம்மான் இவர்களை நேற்று புனர்வாழ்வு நிலையத்தில் ஒப்படைத்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி

## இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டு

## சொல்ஹெய்ம் தன்னை சந்திக்காததற்கு ஆனந்தசங்கரி விசனம் தெரிவிப்பு!

(முன்னணியின் வேட்பாளருமான மேஜர் ஜென ... யவன் என்ற அடிப்படையில், இன்னொரு யுத

(12 ஆம் பக்கம் பார்க்க)

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி

# இந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட அகதிகள் தப்பினர்!

## வவுனியா அரசியற்துறையில் தஞ்சம்

(கொழும்பு)

வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாக அழைத்துவரப்பட்டு, கொழும்பில் வீடொன்றில் அடைத்துவைக்கப்பட்ட 12 பெண்கள் அங்கிருந்து தப்பிவந்து விடுதலைப் புலிகளிடம் தஞ்சம் கோரியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் இடம்பெயர்ந்து இந்தியா சென்று அங்குள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்தனர்.

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகக்கூறி இவர்களில் 14 பெண்கள் அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் வத்தளையிலுள்ள வீடொண்றினுள் அடைத்து வைக்கப்பட்டனர். கடந்த மூன்று மாதங்களாக இவர்களுக்கு அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு வீட்டினுள் அடைக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு ஒழுங்காக உணவுப் பொருடகள் எதுவும் வழங்கப்படவில்லை. சில வேளை இரவில் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதுண்டு. (12 ஆம் பக்கம் பார்க்க)

# கரிகாலன் - கௌசல்யன் யாழ்ப்பாணம் வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

மட்டு. - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், கிழக்குப்பகுதி மூத்த உறுப்பினர் கரிகாலன் ஆகிய இருவரும் நாளை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

நாளைகாலை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சமகால அரசியல் நில்லை குறித்து உரையாற்றவுள்ளனர்.

இதன் பிறகு யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மாணவர்களைச்சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

# சொல்ஹெய்ம் தன்னை சந்திக்காததற்கு ஆனந்தசங்கரி விசனம் தெரிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் கடந்த வியாழக்கிழமை யாழப்பாணம் வந்து பல்வேறு தரப்பினரைச் சந்தித்தபோதும் தன்னைச் சந்திக்காததையிட்டு தான் அதிருப்தியடைவதாக யாழ்.மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடும் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது

யாழ்.மாவட்டத்தின் 10 குழுக்கள் தேர்தலில் போட்டியிடுகின்றன. இவற்றில் 3 குழுக்கள் மிகவும் உத்வேகமாக தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன. இந்த நிலையில் சொல்ஹெய்ம் ஏன் என்னைச் சந்திக்கவில்லை.

அத்துடன் விடுதலைப் புலிகள் 48 இலக்கத் தகடு இல்லாத வாகனங்களில் திரிந்து யுத்தநிறுத்த மீறல் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். சொல்ஹெய்ம் என்னைச் சந்தித்திருந்தால் அவற்றையெல்லாம் நான் அவருக்குச் சொல்லியிருப்பேன்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பயிற்சி முகாமில் கிரனேட் வெடித்து 2 படையினர் ஸ்தலத்தில் மரணம்

## அநுராதபுரத்தில் சம்பவம்

(கொழும்பு)

அநுராதபுர மாவட்டத்திலுள்ள பூகொட இராணுவப் பயிற்சி முகாமில் இடம்பெற்ற வெடிவிபத்தால் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தகவல் தருகையில் -

அநுாதபுரத்திலிருந்து வடமேற்காக 28 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பூகொட இராணுவப் பயிற்சி முகாமில் புதிதாகச் சேர்க்கப்பட்ட படையினருக்கான வெடிபொருள் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன.

பயிற்சியாளரான இராணுவச்சிப்பாய் ஒருவர் கிரனேட் ஒன்றை வீசி எறிந்தபோது, அது நிலத்தில் வீழ்ந்து வெடித்தது. இதில் அந்த பயிற்சியாளரான இராணுவச்சிப்பாயும் பயிற்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...



அளவெட்டி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர்தின நிகழ்வில், சங்கத்தலைவி எஸ். செல்வராணி தலைமையில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரசஅதிபர் திருமதி.ப.திலநாயகம்போல் மற்றும் பிரதேச செயலர் க.குணராஜா வண.பிதா.கிங்ஸ்லி சுரேந்திரன் ஆகியோருடன் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினரையும் காணலாம்.

# படையினர் அழித்த மரங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்

## தெங்கு செய்கையாளர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் படையினரால் அழிக்கப்பட்ட தென்னை வளங்களுக்குரிய நட்டஈடு வழங்கப்பட வேண்டுமென, வடமாகாண தெங்குச செய்கையாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவிற்கும், வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கத் தலைவர் அ.நல்லதம்பி தலைமையிலான குழுவினர்களுக்கிடையில் விசேட சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, கடந்த காலத்தில் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால், இலட்சக்கணக்கான தென்னைமரங்கள் அழிக்கப்பட்டன. இன்றும் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள தென்னை மரங்கள் படையினரால் பல்வேறு தேவைகளுக்கு தறிக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இதுவரை காலமும் படையினரின் நடவடிக்கைகளால் தமது தென்னை வளங்களை இழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுவதுடன், படையினர் தாம் ஆக்கிரமித்து வைத்துள்ள தென்னை வள மிகு பகுதிகளையும் மக்களிடம் ஒப்படைக்க வேண்டுமென தெங்குச் செய்கையாளர் சங்கம் கோரியுள்ளது. (17)

### தீவக மக்களுக்கு கலந்துரையாடல்

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும், வெளிமாவட்டங்களிலும் உள்ள மக்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று 10 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இந்தக் கலந்துரையாடலில் தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தேசிய எழுச்சிப் பேரவையின் தீவகக்கோட்டம் அறிவித்துள்ளது.

# திருத்தப்படாத நிலையில் 400 மீற்றர் நீளமான வீதி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள கஸ்தூரியார் வீதியில், கில்னர் ஒழுங்கை தொடக்கம் யாழ்.இந்துக்கல்லூரி மைதானம் வரையான சுமார் 400 மீற்றர் நீளமான பகுதி நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இந்த வீதியானது, மோசமாகப் பழுதடைந்துள்ளமையால் இந்தவீதியைப் பயன்படுத்தும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை மழை காலங்களில் எதிர்நோக்குவதுடன், மழை காலங்களில் இந்த வீதிக் குழிகளில் நீர் நிரம்பி இருப்பதால், பல அசௌகரியங்களையும் எதிர் கொள்வதாக அப்பகுதி மக்கள் பெரும் விசனம் தெரிவித்தனர்.

இவ் வீதியூடாக யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை போன்ற பாடசாலைகளின் மாணவர்கள் அதிகமாக பயணிப்பது குறிப்பிடத்தக்கது. (113)

# பொதுத்தேர்தல் நடைமுறைகள் பிராந்திய ரீதியில் நடைபெறும்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் நடைமுறைகள் குறித்த கருத்தரங்குகளை பிராந் திய ரீதியில் நடத்தவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையிலான கருத்தரங்கொன்று எதிர்வரும் 18 ஆம் திகதி அம்பாறையில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், உதவித் தேர்தல் ஆணையாளர், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஆகியோரும் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், இந்தக் கருத்தரங்கில் - தேர்தலின்போதும், தேர்தலின் பின்னரும், பொலிஸார் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள், மக்களின் அடிப்படைஉரிமைகள் மற்றும் தேர்தல் சட்டங்கள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 740 அங்கவீனர்கள் வசிக்கின்றனர்

## விரைவில் பயிற்சித் திட்டம் அமுல்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவினுள் அங்கவீனர்கள் 740 பேர் வசிப்பதாக நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் சமூகசேவைத் திணைக்கள உத்தியோகத்தர் கே. சண்முகலிங்கம் தெரிவித்தார்.

விசேட தேவைக்குரியோர் எனப்படும் வலது குறைந்தோர் எண்ணிக்கை கடந்த காலங்களைவிட அதிகமாகக் காணப்படுகிறது. நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 38 கிராம அலுவலர் பிரிவுகளில் அண்மைய நாட்களில் மேற்கொண்ட மீளாய்வின் பயனாகவே இந்தப் புள்ளிவிபரம் கிடைக்கப்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான விசேட பயிற்சித் திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்போது பதிவு செய்யப்பட்டிருக்கும் 740 பேர் பற்றிய விபரம் கடந்த ஆண்டைக்காட்டிலும் 200 ஆல் அதிகரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்டுகிறது.

# வைத்தியசாலைக்கு காணி அன்பளிப்பு

இந்தியா சென்னையில் வசிக்கும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த, கருணாகரன் தம்பதியினரால் வைத்தியசாலைக்கு அருகேயுள்ள 30 இலட்சம் பெறுமதியான காணியை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள்.

இந்த அன்பளிப்பு வைபவம் கடந்த வாரம் இடம்பெற்றது. காணிமுறியை கருணாகரன் தம்பதிகளின் சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாளிடம் கையளித்தனர். (17)

## வல்வெட்டித்துறை வைத்தியசாலையில்

# 120 வறிய மக்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபையினால் நடாத்தப்பட்டுவரும் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் கரவெட்டி பிரதேசத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் மக்களுக்கு இலவச கண் முகாமில் - கண்ணாடி பாவிக்கச் சிபார்சு செய்யப்பட்ட 120 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இந்த விழாவில், இளைப்பாறிய நீதிபதி எம்.திருநாவுக்கரசு, யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராசசுந்தரம், வலயகல்விப்பணிப்பாளர்கள் வி.ரி. செல்வரத்தினம், கரவெட்டி பிரதேச செயலர் எஸ் கனகரத்தினம், பருத்தித்துறை உதவி பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். (17)

# பொன் அணிகளின் போர்

# சென்.பற்றிக்ஸ் 9 விக்கெட்டுக்களால் யாழ்ப்பாணக் கல்லூரியை வென்றது!

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் சென்.பற்றிக்ஸ் - யாழ்ப்பாணக்கல்லூரிகளுக்கிடையில் கடந்த இரண்டு நாட்களாக சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 9 விக்கெட்டுக்களால் யாழ்ப்பாணக் கல்லூரி அணியைத் தோற்கடித்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணக் கல்லூரி-சென். பற்றிக்ஸ் கல்லூரியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது. இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் - தனது முதல் இனிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதற்கு பதிலளித்து ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி, தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 86 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதனையடுத்து 'பலோ ஒன்'னைத் தவிர்ப்பதற்காக இரண்டாவது இனிங்ஸை ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப்பெற்றது.

37 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த பற்றிக்ஸ் அணி ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்தப் போட்டிகளில் பற்றிக்ஸ் கல்லூரியின் வீரர் விநோதன் 61 ஓட்டங்களையும், யாழ்ப்பாணக் கல்லூரியின் வீரர் உதயகுமார் 59 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

இரு அணிகளுக்குமிடையிலான போட்டியில் பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த விநோதன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த துஜன் சிறந்த பந்துவீச்சாளராகவும், சகலதுறை ஆட்டக்காரராக பற்றிக்ஸ் கல்லூரியின் செல்வின் லொயிட்டும், தொடரின் ஆட்டநாயகனாக பற்றிக்ஸ் கல்லூரியின் சுரேனும், சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணக் கல்லூரியின் திலீபனும் தெரிவுசெய்யப்பட்டனர்.


Pillaiyar Garden Restaurant
Pillaiyar Hotel Restaurant
Week End Family Packege

பிள்ளையார் இன் காடின் றெஸ்றோறன்ட் சனி, ஞாயிறு வார இறுதி நாட்களில் குடும்பங்களுக்கு விசேட விலைக்குறைப்புடன் சாப்பாடுகள், இனிப்புப் பண்டங்கள் செய்து வழங்குவார்கள்.

* உங்களின் பிறந்த தினமா?
* விவாக நிச்சயார்த்தமா?
* அலுவலக விருந்து வைபவங்களா?

இவற்றைத் திறம்பட நடாத்தி சிறந்த சாப்பாடுகளையும் வளங்கி உங்கள் உற்றார் உறவினர் நண்பர்களை மகிழ்விக்க நீங்கள் நாடவேண்டிய இடம்

பிள்ளையார் இன்

திறந்த வெளி காடின் றெஸ்றோறன்டில் குளிர்ந்த பியர், கொக்ரெயில்ஸ் (Cocktails) அனுபவம் வாய்ந்த ஒபறேய் ஹோட்டலில் (Oberoi Hotel) பணியாற்றிய வல்லுநரால் செய்து வழங்கப்படும்.

எங்களிடம் சகல வசதிகளையும் கொண்ட, குளியலறையுடன் கூடிய குளிரூட்டப்பட்டஅறைகள், வாகனத்தரிப்பிடம், குளிரூட்டப்பட்ட வாகனம் எக்ஸ்போ ஏவியேசன் (Expo Aviation) லயன் எயர் (Lion Air) விமானப் பயணச் சீட்டுக்கள்.

இவையாவற்றுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

பிள்ளையார் இன்

பிள்ளையார் இன்
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P :- 021-222-5595
021-222-2829

E - Mail :- piyar inn @ setnet.lk
WEBSITE - WWW.PILLAIYAR INN.COM

(சி/2314)



யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)



சிறு விளம்பரம்

வீடு விற்பனைக்கு

$3\frac{1}{2}$ பரப்புக்காணியில் அமைந்துள்ள 4 அறைகள் கொண்ட வீடு- ஆசீர்வாதம் ஒழுங்கையில் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு : T.P- 0777-722810, 021-222-7540 (661)



திருச்சனாஸ் சங்கானை
தனுஷ், அபர்ணா, கருணாஸ் நடித்த
புதுக்கோட்டையிலிருந்து சரவணன்



காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
STY KIDS - 2
(சி-2262)



ராஜா யாழ்ப்பாணம்.
சிம்பு, சோனியா அகர்வல், நாசர் நடித்த
கோவில்



10.30, 2.30,
6.30, 9.30 (பு.நே)
செவ்வாய் முதல்
மௌனம் பேசியதே
(சி-2263)

# கருணா தன்னை அபாயத்தின் விளிம்புக்குள் தள்ளுகின்றார்!

## தமிழ்ச்செல்வன் பேட்டி



(கிளிநொச்சி)

எமது இயக்கத்தின் கட்டுப்பாட்டை உதறித் தள்ளுவதன் மூலம், கருணா தன்னை அபாயத்தின் விளிம்புக்குள் தள்ளிக்கொள்கிறார் என விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இணையத்தளம் ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது நிலவும் சமாதானத்திற்கும் அமைதிக்கும் குந்தகம் விளையா வண்ணம், மட்டக்களப்பு - அம்பாறை பகுதிகள் மீண்டும் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும்.

இரத்தம் சிந்தாமலும் எமது வீரர்களுக்கு அபாயம் நேராமலும் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கான சாதுரியமான நடவடிக்கைகளை எமது தலைமைத்துவம் வெகு அவதானத்தோடு எடுத்துவருகின்றது.

கருணாவின போக்கு ஒரு நிரந்தரமானதல்ல அது ஒரு குறுகிய காலம்வரை ஓடலாம். நீடிக்கும் என்பதற்கில்லை.

விடுதலைப் புலிகளுக்குரிய மூலவளங்களின் மீது மேலாதிக்கம் செலுத்த கருணா முனைகிறார். இது வெற்றியளிக்காத ஒரு பாழான முயற்சி.

வடக்கு - கிழக்கை தனித் தமிழ்த் தாயகமாக மாற்றப் போராடிவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து கடந்த வாரம் தன்னைத் துண்டித்துக் கொண்ட கருணா, கடந்த வியாழக்கிழமை ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு பேட்டியொன்றை அளித்துள்ளார்.

அதில் அவர், தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளாக சதாகாலமும் புலிகளால் இருக்க இயலாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தேர்தல் கண்காணிப்புப் பணிக்கு அவுஸ்ரேலியா 6 மில்லியன் ரூபா!

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகளும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்த முன்வரவேண்டும் என்று அவுஸ்ரேலியா கேட்டுள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள அவுஸ்ரேலியத் தூதரகம் நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் -

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் - உள்ளூர் கண்காணிப்பாளர்கள் மூலம் தேர்தல் பிரசாரங்களை கண்காணிக்கும் பணிக்கு ஆறு மில்லியன் ரூபாவை அவுஸ்ரேலியா வழங்கும்.

மேலதிக நீதியை கொமன் வெல்த் தேர்தல் கண்காணிப்புக்குழுவுக்கு வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அவுஸ்ரேலிய முன்னாள் செனெட் சபைத் தலைவர் தலைமை தாங்குவது குறிப்பிடத்தக்கது.

## மலிவான விளம்பரம் தேடும் சந்திரிகா; பிக்குகள் விசனம் தெரிவிக்கின்றனர்!

(கொழும்பு)

வண.கங்கொடவில சோமதேரரின் மரணம் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணைக்குழுவை பௌத்த பிக்குகள் நிராகரித்துள்ளனர்.

வண.கங்கொடவில சோமதேரரின் மரணம் தொடர்பாக விசாரிக்க மூன்று உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக்குழுவொன்றை ஜனாதிபதி சந்திரிகா நியமித்திருந்தார்.

முனனாள் உயர்நீதிமன்ற நீதியரசர் பி.எதிரிசூரிய தலைமையில், பேராசிரியர் மென்டிஸ் றோகணதீர, டொக்ரர் டில்குஷி அனுலா விஜேசுந்தர ஆகியோர் அடங்கிய இந்தக் குழு - மூன்று மாதங்களுக்குள் முழு விசாரணை நடத்தி அறிக்கையை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

ஆனால், இந்தக் விசாரணைக் குழுவை பௌத்த பிக்குகள் நிராகரித்துள்ளனர். ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த உடுவே தம்மலோக தேரர் இது குறித்து தகவல் வெளியிடுகையில் -

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசார உத்தியாகவே ஜனாதிபதி இந்த விடயத்தை பிரபலப்படுத்த முற்படுவதாகவும் -

அவர் மலிவான அரசியல் விளம்பரத்தைத் தேடுவதாகவும், சோமதேரரை உண்மையாக நேசித்தை பௌத்த மக்களை ஏமாற்ற முனைவதாகவும் உடுவே தம்மலோக தேரர் தெரிவித்தார்.

# புலிகளுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் பேச்சுக்கள் மூலமே தீர்க்கப்பட வேண்டும்!

## மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பு வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்டிருக்கும் உள்முரண்பாடுகளை பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்கவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

கிழக்கின் தற்போதைய நிலை குறித்த ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

சில தடங்கல்கள் கிழக்கில் ஏற்பட்டிருந்தபோதும் தற்போது எமது கட்சியின் பிரசார நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த மட்டில் இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்திலும் புலிகள் எம்மை பூரணமாக ஆதரிக்கின்றனர்.

பதினேழாயிரத்த ஐந்நூறு இளைஞர்களை உயிர்ப்பலி கொடுத்தே இன்றைய சமாதான நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அந்த உயிரிழப்புக்கள் அர்த்தமற்றதாக போய்விடக்கூடாது.

இந்தப பிரச்சினை உடனயாகத் தீர்க்கப்பட வேண்டும்.

தமிழர் இரண்டுபட்டு நின்றால், அது எமது சுதந்திரத்தை அடக்க நினைப்பவர்களுக்கு சாதகமாகிவிடும்.

நாம் ஒன்றுபட்டு நிற்பதே சிறப்பு எனவும் தெரிவித்தார்.

## பொதுத்தேர்தல் நடைமுறைகள்; பிராந்திய ரீதியில் கருத்தரங்குகள்!

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் நடைமுறைகள் குறித்த கருத்தரங்குகளை பிராந்திய ரீதியில் நடத்தவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையிலான கருத்தரங்கொன்று எதிர்வரும் 18 ஆம் திகதி அம்பாறையில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், உதவித் தேர்தல் ஆணையாளர், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஆகியோருக்கும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் இந்தக் கருத்தரங்கில், தேர்தலின் போதும், பின்னரும், பொலிஸார் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள், மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் தேர்தல் சட்டங்கள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுமா?

### மேன்முறையீட்டு நீதிமன்றம் கேள்வியெழுப்புகிறது

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, பொலிஸ் மா அதிபரின் பதவிக் காலத்தை நீடித்தமையை எதிர்த்து, நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்படலாமா என மேன்முறையீட்டு நீதிமன்றம் கேள்வியெழுப்பியுள்ளது.

முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர், சீ.ரி.ஜோன்ஸ் உட்பட்ட குழுவினர், பொலிஸ் மா அதிபரின் பதவிக்கால நீடிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தாக்கல் செய்யப்பட்ட மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அரசியல் யாப்பின், 35 ஆம் வாசகத்தில் உள்ள நிபந்தனைகளின் பிரகாரம், ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என, மேன்முறையீட்டு நீதிபதி கே.ஸ்ரீபவன் தெரிவித்தார்.

இதேவேளை இந்த வழக்கு மீதான விசாரணை இம்மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வன்னி மக்கள் வாக்களிப்பு குறித்து தமிழ்ச்செல்வனுடன் இன்று சந்திப்பு!

வன்னி மக்கள் வாக்களிப்பது தொடர்பான விடயம்பற்றி இன்று வன்னியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடப்படவுள்ளதாக மாவை சேனாதிராஜா தெரிவித்தார். நேற்று மாட்டின் வீதியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துக்கூறும்போது அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பை முடித்துக் கொண்டு நாளை தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து இது தொடர்பாக பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். தமிழ்க்கூட்டமைப்பின் வேட்பாளர்கள் சுரேஸ் பிறேமச்சந்திரன், கஜேந்திரகுமார், கஜேந்திரன், சிவஞானம், ஈழவேந்தன், ரவிராஜ் முதலியோரும் இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் சமூகமளித்திருந்தனர்.

## கிழக்கு பல்கலைக்கழக

# மாணவர்களை வெளியேற்றியதை கண்டித்து வவுனியாவில் கறுப்புப்பட்டி போராட்டம்!

### தேசியத் தலைவருக்கு மகஜரும் கையளிப்பு

(வவுனியா)

மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வவுனியா வளாக கல்விச் சமூகத்தினர் நேற்றுமுன்தினம் கறுப்புப் பட்டிப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் வவுனியா வளாக நிர்வாக கட்டடத்தின் முன்பாக அமைதியாக இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இந்தக் கறுப்புப்பட்டிப் போராட்டத்தில் மாணவர்கள், விரிவுரையாளர்கள் உத்தியோகத்தர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

கறுப்புப்பட்டிப் போராட்டத்தின் முடிவில் கிழக்குப் பல்கலைக்கழக தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தியும் வவுனியா வளாக கல்விச் சமூகத்தின் உணர்வு பூர்வமான அறிக்கையை தமிழீழத் தேசியத் தலைவருக்கு வழங்கும் முகமாக வவுனியா மாவட்ட நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் இளங்கதிரிடம் முற்பகல் 11 மணிக்கு வவுனியா மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.(03)

# இயல்புநிலை பாதிக்கும் வகையில் பிரசாரங்களில் ஈடுபடக்கூடாது!

## கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

அரசியல் கட்சி ஆதரவாளர்கள், கட்சிகளின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களின் போது, இயல்பு நிலையைப் பாதிக்கும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது என கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் அலுவலகத்தைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட, ஜே.வி.பி.யின், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் ஆதரவாளர்கள் 7 பேரையும், எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், மேலதிக நீதிவான் ரஞ்சன் திசாநாயக்க உத்தரவிட்டார்.

அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும், அமைதியான முறையிலேயே தமது தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவேண்டும் எனவும் அவர் கூறினார்.

## தேர்தல் கண்காணிப்பாளர்கள் இருவர் திருமலைக்கு விஜயம்!

திருகோணமலை மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக ஐரோப்பிய யூனியனின் இரண்டு பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் அங்கு சென்றுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று திருமலை மாவட்ட அரச அதிபரும், தேர்தல் தெரிவித்தாட்சி அதிகாரியுமான காமினி றொட்றிகோ, உதவித் தேர்ல் ஆணையாளர் யாப்பா பண்டார ஆகியயோரைச் சந்தித்து திருமலை மாவட்டத்தின் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து முதற்கட்ட பேச்சுக்களை நடத்தினர்.

அடுத்த சில தினங்களில் திருமலை மாவட்டத்தில் போட்டியிடும் அரசியற் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சைக்குழு உறுப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (10)

# பாகிஸ்தானுடனான முதலாவது போட்டியில் இந்திய அணி ஐந்து ஓட்டங்களால் வெற்றி!


இன்ஸமாம் உல் ஹக்

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கராச்சியில் நேற்று நடந்த பரபரப்பான சர்வதேச ஒருநாள் போட்டியில் இந்திய அணி 5 ஓட்டங்களால் பாகிஸ்தானைத் தோற்கடித்தது.

முன்னதாக நாணயச்சுழற்சியல் வென்ற பாகிஸ்தான் அணித்தலைவர் இன்ஸமாம் உல்ஹக் இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்கள், நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவடையும்வரை பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களது பந்துகளை துவம்சம் செய்து ஓட்டங்களைக் குவித்தனர். முடிவில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 349 ஓட்டங்களை குவித்தது.

இந்த அணியில் ராவிட் 99, சேவாக் 79, டென்டுல்கர் 28, அணித்தலைவர் கங்கூலி 45, முகமட் கை.்.வ் 46 ஓட்டங்களை சிறப்பான முறையில் பெற்றனர். பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் அனைவரும் 50 இற்கு மேற்பட்ட ஓட்டங்களை தமது பந்துவீச்சின் மூலம் விட்டுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சொகைப் அக்தர், மொகமட்சமி இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், நவீட் அல்ஹசன் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

350 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற பெரியதொரு இலக்குடன் பதிலுக்குத்துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி, தனது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் முன்னரேயே இழந்தது.

ஆனால், அதன் பின் யூசுப்யுகானாவுடன் நான்காவது விக்கெட் இணைப்பாட்டமாக இணைந்த அணித்தலைவர் இன்ஸமாம் உல்ஹக் ஜோடி இந்திய பந்துவீச்சாளர்களின் பந்துகளை பொருட்படுத்தாமல் ஓட்டங்களைக் குவித்தனர்.


ராவிட்

ஆனாலும், இந்த ஜோடி ஆட்டமிழந்தவுடன், பின்னர் வந்தவர்கள் சிறப்பாக ஆடினாலும் அவர்களால் இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை 5 ஓட்டங்களைப் பெற்று எட்டமுடியாத காரணத்தால் தோல்வியை பாகிஸ்தான் அணி தழுவியது. இந்த அணி சார்பாக அணித்தலைவர் இன்ஸமாம் உல்ஹக் 122, யூசுப் யுகானா 73, யுனுஸ்கான் 46, அப்துல் ரஸாக் 16 பந்துகளில் 27, இம்ரான் பர்கத் 24 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர். இந்திய பந்துவீச்சாளர்களும் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களுக்கு தாம் சளைத்தவர்கள் அல்ல என்ற நிலையில் பெருமளவு ஓட்டங்களை எதிரணிக்கு விட்டுக்கொடுத்தனர். சகீர்கான் 3, முரளி கார்த்திக் 2, பாலாஜி, அசிஷ் நெஹ்ரா, சேவாக் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்றைய போட்டியில் இந்திய அணியில் வி.வி.எஸ்.லக்ஷ்மன், இர்பான் பதான் இருவரும் காயம் காரணமாக விளையாடவில்லை. இவ்விரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டி, நாளை மறுதினம் ராவல் பிண்டியில் பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

## மேசைப்பந்தாட்ட சம்பியனாக 5 ஆவது தடவையும் மோகன்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயின் 2003/2004 ஆம் ஆண்டுக்கான உள்ளக விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பு வைபவமும் கடந்த புதன்கிழமை வை.எம். சி.ஏ உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

விளையாட்டுப்பிரிவு தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு, யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளரும், முன்னாள் மாவட்ட விளையாட்டு அதிகாரியுமான திருமதி ரூபசிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களையும் வழங்கினார்.

இறுதிப்போட்டிகளுக்காக ஆண்களுக்கான மேசைப்பந்தாட்ட ஒற்றையர் ஆட்டம் இடம்பெற்றது. இதில் மாவட்ட சம்பியனான ஜெ.மோகனை எதிர்த்தாடிய பா.ஜெயதாசன் 7-11, 9-11, 9-11 எனும் நேர் செட்களில் தோல்வியடைந்தார். 5 ஆவது தடவையாகவும் மோகன் சம்பியன் பட்டத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது. (205)

# தென்னாபிரிக்கா இரண்டாவது இனிங்ஸில் மூன்று விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 134!


ஜேக்கப் ஓரம்

நியூஸிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் ஹமில்ரனில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று, தென்னாபிரிக்கா, தனது இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் நியூஸிலாந்து 7 விக்கெட்டுக்களை இழந்து, 361 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 509 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக ஜேக்கப் ஓரம் ஆட்டமிழக்காமல் 116, பப்ஸ் 59, ஸ்ரைஸ் 74, மக்கலம் 57, விற்றோறி 53, வைஸ்மன் 36, பிளமிங் 27, ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பொலக் 4, கலிஸ் 3, அடம்ஸ் 2, என்ரினி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸில் விளையாடும் தென்னாபிரிக்கா, மூன்று விக்கெட்டுக்களை இழந்து, 134 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இவ்வணி சார்பாக கிப்ஸ் 47 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்ற அதேவேளை, கலிஸ் 56, மக்கன்சி 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் ரபி, கெயின்ஸ், வைஸ்மன் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளனர்.

தென்னாபிரிக்க அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 459 ஓட்டங்களை எடுத்திருந்தது.

## விளையாட்டு

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயம், பிளவத்தை அரசினர் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, நாளை மறுதினம் பி.ப 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவில் வீதியில் நடைபெறவுள்ளது.

# பங்களாதேஷ் ஒருநாள் தொடரை சிம்பாப்வே அணி கைப்பற்றியது!

சிம்பாப்வே - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் ஹராரேயில் நேற்று முன்தினம் நடந்த நான்காவது சர்வதேச ஒருநாள் போட்டியில், சிம்பாப்வே அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.


ஹீத் ஸ்ரீக்

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடித் தீர்மானித்தது.

இதன்படி இந்த அணி நிர்ணயிக்கப்பட்ட ஐம்பது ஓவர்களில், எட்டு விக்கெட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது. இந்த அணி சார்பாக எர்வின் 50, அணித்தலைவர் ஹீத் ஸ்ரீக் 45, இப்ராஹிம் 33, ரோஜஸ் 26, பிளிங்நட் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தரீஸ் அசீஸ் 2, ரபாஸ்பைஸ்யா 3, ரஹ்மான், முகமட் ரபிகியூ, ராஜின் சாலே மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 49.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 228 ஓட்டங்களை மட்டும் எடுத்ததனால் 14 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்து வீச்சில் அணித்தலைவர் ஸ்ரீக் 4, பிறன்ட், எர்வின் இருவரும் தலா 2, பிறைஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் சிம்பாப்வே நடந்து முடிந்த நான்கு போட்டிகளில் 3:1 என்ற நிலையில் வென்று முன்னணியில் உள்ளது.

# மேற்கிந்தியத் தீவுகளுடனான முதலாவது டெஸ்ட் இங்கிலாந்து மூன்று விக்கெட்டுக்களுக்கு 154!


மார்க் புட்சர்

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் ஜமேக்காவில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்டின் இரண்டாவது நாளான நேற்று, இங்கிலாந்து தனது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக மேற்கிந்தியத்தீவுகள் தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 311 ஓட்டங்களைப்பெற்றது.

இவ்வணிசார்பாக ஸ்மித் 108, அணித்தலைவர் லாரா 23, ஹைன்ட்ஸ் 84, ஜேக்கப்ஸ் 38, பெஸ்ட் 20 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கோகாட் 3, ஹரிநிசன், ஜோன்ஸ், கைல்ஸ் மூவரும் தலா இரண்டு, பிளின்ரொப் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். பதிலுக்கு தனது முதலாவது இனிங்ஸை தற்போது விளையாடிக்கொண்டிருக்கும் இங்கிலாந்து நேற்றைய ஆட்டநேர முடிவின்போது 3 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இவ்வணி சார்பாக புட்சர் 58 ஓட்டங்களையும், நஸார் ஹுசைன், கிரஹாம் தோர்ப் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 41, 1 ஓட்டங்களையும் பெற்று ஆடிக்கொண்டிருக்கின்றனர்.

பந்துவீச்சில் எட்வேட் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

## காங்கிரஸ் கட்சியின் சார்பில் சிதம்பரம் சிவகாசியில் போட்டி!

காங்கிரஸ் கட்சியின் இரண்டாவது வேட்பாளர் பட்டியல் வரும் 16 ஆம் திகதி வெளியிடப்பட இருக்கிறது. இதில் தமிழகத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் பலரது பெயர்கள் வெளியாகும் என்று தெரிகிறது.

75 வேட்பாளர்கள் கொண்ட அக்கட்சியின் முதல் பட்டியல், கடந்த 10 ஆம் திகதி வெளியானது. அதில் தமிழகத்தைப் பொறுத்தவரை 2 வேட்பாளர்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். இளங்கோவன், தங்கபாலு போன்றவர்களின் பெயர்கள் இல்லை.

நீலகிரி தொகுதியின் வேட்பாளராக பிரபுவும், மயிலாடுதுறை தொகுதியின் வேட்பாளராக மணிசங்கரஜயரும் மட்டுமே அன்று அறிவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் அடுத்த பட்டியலை வெளியிடும் பணியில் காங்கிரஸ் தலைமை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

சிவகங்கைத் தொகுதியைக் கேட்டு ப.சிதம்பரம் தொடர்ந்து நெருக்குதல் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். தனது காங்கிரஸ் ஜனநாயகப் பேரவையையும் கலைத்துவிட்டு காங்கிரஸில் ஐக்கியமாகவும் அவர் முன்வந்துவிட்டதாகத் தெரிகிறது.

## கிரிக்கட் வீரர் ஸ்ரீகாந்துக்கு தேர்தல் ஆணையகம் தடை

இந்திய அணியின் முன்னாள் கப்டன் கிருஸ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் கிரிக்கட் வர்ணனையையும், தேர்தல் பிரசாரத்தினையையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள தேர்தல் ஆணையகம் தடைவிதித்துவிட்டது.

இதனால் அவர் இந்தியா, பாகிஸ்தான் போட்டிகள் முடியும்வரை பா.ஜ.காவுக்கு ஆதரவாகதேர்தல் பிரசாரத்தில் ஈடுபடப்போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

ஸ்ரீகாந் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்யப்போவதாக அறிவித்திருந்தார். இந்நிலையில், தற்போது பாகிஸ்தானில் தொடங்கியுள்ள இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான கிரிக்கட் போட்டிகளை தொலைக்காட்சியில் நேரடி வர்ணனை செய்யவுள்ளார் ஸ்ரீகாந்த். அத்தோடு, அவ்வப்போது பிரசாரத்திலும் ஈடுபட அவர் முடிவுசெய்திருந்தார்.

ஆனால் இரண்டையும் ஒரே நேரத்தில் செய்ய தேர்தல் ஆணையம் தடைவிதித்துள்ளது. ஏதாவது ஒன்றைத்தான்செய்யவேண்டும் என்று ஆணையம் கண்டிப்பாகக் கூறிவிட்டது.

இதனால் நிறைய பணமும், விளம்பரமும் கிடைக்கும் கிரிக்கட் வர்ணனை செய்ய ஸ்ரீகாந்த் முடிவுசெய்துள்ளார். பாகிஸ்தான் தொடர் முடியும்வரை பிரசாரம் செய்வதில்லை என்றும் அவர் முடிவெடுத்துள்ளார்.

## மணிசங்கர ஐயர் நேற்று கருணாநிதியை சந்தித்தார்

தி.மு.க தலைவர் மு.கருணாநிதியை மயிலாடுதுறை காங்கிரஸ் வேட்பாளர் மணிசங்கரஜயர் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். மயிலாடுதுறையில் மணிசங்கரஜயர் காங்கிரஸ் சார்பில் போட்டியிடவுள்ளார். அவரை ஆள்வைத்துத் தாக்கிய ஓ.எஸ்.மணியன் அ.தி.மு.க சார்பில் போட்டியிடுகிறார்.

நேற்று கருணாநிதியை அவர் சந்தித்தபோது, மணியத்தின் ஆள் பலத்தைச் சமாளிப்பது குறித்துப் பேசியதாகத் தெரிகிறது. அப்போது ஐயருக்கு தி.மு.க தொண்டர்களின் முழு உதவியும் தரப்படும் எனக் கருணாநிதி உறுதியளித்தார்.

சந்திப்புக்கு பின் நிருபர்களிடம் பேசிய ஐயர், மரியாதை நிமித்தம் கருணாநிதியைச் சந்தித்தேன். அவரது வாழ்த்தைப் பெற்றேன். இனி புத்துணர்வோடும், புதுத் தெம்போடும் பிரசாரத்தைத் தொடங்கப் போகின்றேன்.

சோனியாகாந்தி குறித்து முதல்வர்ஜெயலலிதா மிக அநாகரிகமாக பேசிவருகிறார். சோனியா பற்றி பேசக் கூட ஜெயலலிதாவுக்கு எந்தத் தகுதியும் கிடையாது என்றார்.

# இடைக்கால நிர்வாகத்தை பெறுவதற்காகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்கிறோம்

## தீவக பொறுப்பாளர் கண்ணன் உரை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தேர்தல் பிரசார நிகழ்வு அண்மையில் நெடுந்தீவில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் தீவக சிறப்பு அரசியற் பொறுப்பாளர் ந.கண்ணன் உரையாற்றும்போது -

பலம்பொருந்திய எங்கள் தமிழினத்தை எவரும் அளித்துவிட முடியாதளவுக்கு வகை செய்துள்ளவர்கள் விடுதலைப் புலிகள்தான். உயர்வான தலைவனின் வழிகாட்டலில் உண்மையானவர்களை உருவாக்கியுள்ளது எனத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது-

எமது அமைப்பில் இணையும் ஒவ்வொரு போராளியும் தலைவனின் வழிகாட்டலில், தமிழினத்தைக் காக்கவென்றே வருகின்றார்கள். வந்தவர்கள் அனைவரும் இனமத, பிரதேச வேறுபாடின்றி ஒன்றாகத் தலைவரின் வழிகாட்டலில் வாழ்கின்றோம்.

தற்போது மக்கள் மத்தியில் ஒரு பிரச்சினை கிளம்பியுள்ளது. இது ஒரு தனிமனிதனான கருணாவினால் உருவாக்கப்பட்டதே தவிர, இயக்கத்தின் பிரச்சினையல்ல. உயர்வான தலைவனை நம்பியே அப்பிரதேச இளைஞர்கள் இணைந்துள்ளார்கள்.

தனிமனிதனது பிரச்சினையினைத் தலைமை தீர்த்துக்கொள்ளும். எந்தப் போராளியாய் இருந்தாலும், ஏன் கருணாவாயினும் போர்க்களத்தில் நிற்கும்போது, எம் தலைவர் தான் அதற்கு வழிகாட்டி. அதுமட்டுமல்ல இன்று யாழ். பரப்பிலே அரசியற் பணியாற்றும் போராளிகளுக்கு அரசியல் அறிவூட்டிவிட்டதும் தலைவர்தான். எனவே, இந்த ஒரு தனிமனிதனால் எதிர்ப்பைக் காட்ட முடியாது.

நாங்கள் இதுவரை காலமும் தேர்தலை வரவேற்றதாகவோ அல்லது அதனால் ஏதாவது சலுகை, உரிமை கிடைக்குமென இலங்கை நாடாளுமன்றங்களை நம்பவுமில்லை. ஆனாலும், இந்தத் தேர்தலை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாங்கள் ஆதரிக்கிறோம்.

பணம் மற்றவர்கள் பக்கம் நிறையவே ஊஞ்சலாடுகிறது. இந்தப் பணமெல்லாம் வந்த விதங்களை எல்லோரும் அறிவோம். ஆனால், அன்று எங்கள் சொந்த உழைப்பினைச் சொந்த வளங்களில் இருந்து பெற முடிந்ததா? இன்று ஏதோ ஓரளவுக்கு நிலைமை மாறி, மக்கள் கொஞ்சம் உழைக்கின்றார்கள். நமக்கு இடைக்கால நிர்வாகம் கிடைக்குமானால், எந்தளவுதூரம் அபிவிருத்தியை முன்னெடுக்கலாம்.

இடைக்கால நிர்வாகம் இழுபறிப்படுவதால் தான் தற்போது இந்தக் கூட்டமைப்பை ஆதரிக்கிறோம். எனவே தான், அனைவரும் வீட்டுச் சின்னத்திற்கு எதிரே புள்ளடியிட்டு, உங்கள் உரிமையை உறுதிப்படுத்துங்கள். (113)



வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற சாரணிய அணித் தலைவர்களுக்கான பயிற்சிநெறியில் கலந்துகொண்ட சாரணர் இயக்கத்தின் ஆணையாளர் டி.வி.எம்.ராஜசிங்கம், பருத்தித்துறை மாவட்ட ஆணையாளர் ஆ.ஜெகநாதன், உதவி மாவட்ட ஆணையாளர் சோ.குழந்தைவேல் மற்றும் பயிற்சியில் கலந்துகொண்ட சாரண மாணவர்களையும் படத்தில் காணலாம்.

### சான்றிதழ் வழங்கல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் நடாத்தப்பட்ட பயிற்சிநெறிக்குத் தோற்றிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு - நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முறைசாராக் கல்விப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.சிவம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஐ.நா. சிறுவர் நிதியத்தின் தலைமை அதிகாரி ஜூடித் புறூனோ, தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையைச் சேர்ந்த கவியன்பன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர்.

### பதிவுகள் நூல் வெளியீட்டுவிழா

அ.யேசுராசாவின் 'பதிவுகள்' நூல வெளியீடு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

க.சட்டநாதன் அறிமுக உரையையும், தி.செல்வமனோகரன் வெளியீட்டுரையையும், சிறப்புரைகளை செ.அருட்செல்வனும், பா.அகிலனும் நிகழ்த்துவார்கள். (206)

# திருநெல்வேலி சந்திப் பகுதியில் இளைஞர் குழுக்கள் மோதல்

## மதுபானக் கடை சீல்வைப்பு

(திருநெல்வேலி)

திருநெல்வேலி சந்திப்பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு - அடிதடியில் முடிந்ததினால், அங்கு பொலிஸார் வந்து இரண்டு பகுதியினரையும் எச்சரிக்கை செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

திருநெல்வேலி மத்திய சந்தைப் பகுதியில் 5 இற்கு மேற்பட்ட மதுபான நிலையங்கள் உள்ளன.

இந்த மதுபான நிலையங்களில் குடித்துவிட்டு இளைஞர் குழுக்கள் செய்யும் அட்டகாசம் ஏராளம்.

நேற்றுமுன்தினம் மாலை இவ்வாறான இரண்டு குழுக்களுக்குடையே ஏற்பட்ட மோதலைப் பொலிஸார் தலையிட்டதால் மோதல் தவிர்க்கப்பட்டது.

எனினும், நள்ளிரவு 11.30 மணியளவில் இரண்டு வாகனங்களில் வந்த பொலிஸார் - பலாலி வீதியில் அமைந்துள்ள இரண்டு மதுபான நிலையங்களும் சீல் வைத்ததுடன், அங்கிருந்த இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான மதுபான வகைகளையும் கைப்பற்றி தம்முடன் எடுத்துச் சென்றனர்.

இந்த நிலையங்கள் அனுமதி பெறாது இயங்கியவை என்பதுடன், இப் பகுதியில் அனுமதி பெறாது பல மதுபான நிலையங்கள் இயங்குவதும், இதன் காரணமாக அடிதடிகளில் இளைஞர் குழுக்கள் ஈடுபடுவதும் வழமையாகிவிட்டது என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கலாசாரத்தைப் பேணுவோர் இந்த விடயத்தில் தலையிட வேண்டுமென மக்கள் விரும்புகின்றனர்.(205)

### குடும்பஸ்தர் படுகாயம்

உழவு இயந்திரத்தில் இருந்து தவறி வீழ்ந்ததில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொழும்புத்துறைப் பகுதியில் இடம்பெற்றது.

ஓடிக்கொண்டிருந்த உழவு இயந்திரம் கிடங்கில் விழுந்ததில் வி.டக்ளஸ் (வயது 32) என்பவரே தவறி வீழ்ந்து படுகாயமடைந்தவராவார். (121)

### விளம்பரப் பலகை விஷமிகளால் சேதம்

வங்கிகளுக்கு என அமைக்கப்பட்டுள்ள மின்னொளி விளம்பரப் பலகைகள் விஷமிகளால் சேதமாக்கப்படும் சம்பவங்கள் திருநெல்வேலியில் அமைந்துள்ள இரண்டு வங்கிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

திருநெல்வேலி மக்கள் வங்கியின் யாழ். பல்கலைக்கழக கிளை விளம்பர பலகை 2 தடவை சேதமாக்கப்பட்டன. பலாலி வீதி இலங்கை வங்கி விளம்பரப்பலகையும் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், மக்கள் வங்கி விளம்பரப்பலகை தற்போது சேதமாகிய நிலையிலும், இலங்கை வங்கிக் கிளை விளம்பரப்பலகை தற்போது அகற்றப்பட்டுள்ளது.

இவ்வாறான செயல்கள் வங்கி வட்டாரங்களிலும், பொதுமக்கள் மத்தியிலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (205)

# சுவரொட்டியில் மை பூசியவர் பொலிஸாரினால் கைது

தேர்தல் பிரசாரத்திற்காக ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிமீது மை பூசிய நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். நகர்ப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழ்.நகரில் பல்வேறு பகுதிகளிலும் எதிர்வரும் பொதுத் தேர்தலையொட்டி, குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்தப் சுவரொட்டிகளை அகற்றுவதிலும், மைப்பூச்சுக்கள் பூசுவதில் ஈடுபட்டிருந்த நபர் - நகரின் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



புனித சாள்ஸ் மகா வித்தியாலய உயர்தர மாணவ மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வலய உடற்கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா மங்கள விளக்கேற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களைப் படத்தில் காணலாம்.

# பச்சிலைப்பள்ளி முன்பள்ளிகளுக்கு தளபாடங்கள் வழங்கப்படும்

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்கு உட்பட்ட முன்பள்ளிகளுக்கு 2003 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திற்கு உட்பட்ட 7 முன்பள்ளிகளுக்கு தலா ஆறு மாணவர்கள் இருக்கைகளும், ஒரு ஆசிரியர் மேசையும், இரண்டு கதிரைகளும் வழங்கப்பெற்றன.

இந்த நிகழ்வு - கடந்த திங்கட்கிழமை பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வு நிறுவனத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசபை செயலாளர் க.சிவராசா, தொழில்நுட்ப அலுவலர் கிருஸ்ணதாசன், பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி நிறுவனத்தைச் சார்ந்த செ.இளங்கோ மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (17)

### முத்துமாரி அம்பாள் ஆலயம் புனரமைப்பு

(கொக்குவில்)

யாழ். நேகடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மேற்படி ஆலய புனரமைப்பு வேலைகளைச் செய்வதற்குப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். ஆலயத்தின் பழைய முன் மண்டபம் முற்றாக அகற்றப்பட்டு, நவீன முறையிலான கொங்கிறீற்றுக் கூரை அமைந்த மண்டபம் அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (206)

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

இலங்கை உதைபந்தாட்ட சமேளனம் வருடாந்தம் செயற்பாட்டில் உள்ள மத்தியஸ்தர்களைப் பதிவு செய்துகொள்வதற்கு அமைய, இந்த வருடமும் மத்தியஸ்தர்களைப் பதிவுசெய்யவுள்ளது.

இது தொடர்பான விண்ணப்பம் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் மத்தியஸ்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உரியமுறையில் பூர்த்திசெய்து, எதிர்வரும் 21 திகதிக்கு முன்னதாக யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒரு சிலருக்குப் படிவம் கிடைக்காவிடின், யாழ். உதைபந்தாட்ட லீக் செயலாளரிடம் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பெண்ணிடம் சங்கிலி அபகரிப்பு

சாவகச்சேரி மகளிர் கல்லூரி வீதியில், சைக்கிளில் வந்துகொண்டிருந்த பெண்ணிடம் சங்கிலி அபகரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது - மகனைப் பாலர் பாடசாலையிலிருந்து வீட்டிற்கு சைககிளில் ஏற்றிக்கொண்டு வந்தபோது, வீதியின் எதிரே வந்த இளைஞனால் சங்கிலி அபகரிக்கப்பட்டது.

அந்தப் பெண் கூக்குரலிட வீதியால் வந்தவர்கள் இளைஞனைப் பின்தொடர்ந்து சென்றபோதும் இளைஞர் தப்பிச் சென்றுள்ளார். (34)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : செ.கஜாணன்
முகவரி : தம்பனை, அச்சுவேலி.

இரண்டாவது அகவையில்



பெயர் : லூ.டிரோன்
முகவரி : சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

ஐந்தாவது அகவையில்



பெயர் : ச.ஆரோன்
முகவரி : பழமூர், இத்தாலி.

பத்தாவது அகவையில்



பெயர் : ற.தர்ஷிகா
முகவரி : வல்வெட்டித்துறை.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------

-----------------

முகவரி:-----------------

-----------------

பிறந்த ஆண்டு:-----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



-----------------
பெற்றோர்



# விளையாட்டு அரங்கம்

**முதலாவது டெஸ்ட் : காலி நகரம்**
**அவுஸ்ரேலியா 220 மற்றும் 512/8 இலங்கை**
**381 மற்றும் 154 அவுஸ்ரேலியா 197 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.**

## ரொம்ப வெறுத்துப் போச்சப்பா

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் என்று எங்கேயோ ஒரு குரல் கேட்கிறது. அது இலங்கை அணி ரசிகரின் குரலாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், பலம் வாய்ந்த



சனத் - மகேல "சேர்ந்தே அழுவோம்"

அவுஸ்ரேலிய அணியை முதல் இனிங்சில் 220 ஓட்டங்களுக்குக் கட்டுப்படுத்தி, தொடர்ந்து தாம் 381 ஓட்டங்களைப் பெற்றபோது, நம்பிக்கை கூடத்தான் இருந்திருக்கும். ஏனெனில், சுழற்பந்து வீச்சாளருக்குச் சாதகமான தடத்தில் மூன்றாவது இனிங்சில் குறைந்தளவு ஓட்டத்தில் அவுஸ்ரேலியாவை வீழ்த்தி, அப்பால் வெற்றியை நோக்கிச் செல்லலாம் என்று, இலங்கை நினைத்திருக்கும்.

இந்த நம்பிக்கையில் களமிறங்கிய இலங்கை- கண்டதெல்லாம் ஏமாற்றம்தான். ஹேடன், மார்டின், லீமன் மூவரும் சதமடிக்க 512 ஓட்டங்கள் சேர்த்தது காணும் என்று எட்டு, விக்கெட் இழப்புடன் ஆட்டத்தையும் நிறுத்திக் கொண்டார்கள் அவுஸ்ரேலியர்.

எனவே, இறுதிநாளில் வெல்லமுடியாத இலக்கை இலங்கைக்கு அவுஸ்ரேலியா நிர்ணயித்தாலும், இலங்கை தோற்கவேண்டும் என்ற அவசியமேதும் இருக்கவில்லை. ஆனால், எந்தச் சுழற்பந்துவீச்சை இலங்கை நம்பியதோ, அதே சுழற்பந்து ஷேன்வோண் என்னும் பெயரில் நச்சுப்பாம்பாக வந்து விஷத்தைக் கக்க இலங்கை அணியின் கதை பரிதாபமாக முடிந்தது.

இங்கு சில விடயங்கள் அவதானிக்கத்தக்கன. எதிர்பார்த்தபடியே சுழற்பந்துவீச்சாளர்களின் கை ஓங்கி இருந்தமை இதற்கு உதாரணம்.

மொத்தம் வீழ்த்தப்பட்ட 38 விக்கெட்டுகளில் 29 விக்கெட்டுகள் சுழற்பந்து வீச்சாளர்களால் கைப்பற்றப்பட்டமை. அதோடு இரண்டாவது இனிங்சில் முரளி மட்டும் தனித்து 56 ஓவர்கள் வீசியிருப்பது. இது முரளிக்கு எந்தளவு நியாயம் செய்யும் என்பதை அணித்தலைவர்தான் கூறவேண்டும்.

இன்னொன்று. ஏற்கனவே அவுஸ்ரேலியா அணித்தலைவர் ரிக்கிபொன்டிங் விளையாட்டுத்தடம் திட்டமிட்டுத் தயார்படுத்தப்படுவதாகக் குறைகூறியிருந்தார். ஆனால், அவுஸ்ரேலிய அணி சாத்து சாத்தென்று சாத்தியிருக்கிறது. ஆனால், இலங்கை அணி ஆறு மணித்தியாலங்கள் அல்லது தொண்ணூறு ஓவர்கள் தாக்குப்பிடிக்க முடியாமல் சுருண்டு போனது.

இந்த வகையில், இப்படி அற்பமாகத் தோற்றுப்போகும் அளவிற்கு இலங்கைத் துடுப்பாட்ட அணி பலவீனமானதல்ல. குற்றம் சொல்லத்தக்கதும் அல்ல. அப்படியானால், ஷேர்வோணின் பந்து சுழற்றலில் இலங்கைக்குத் தலை சுற்றிப் போயிற்று என்று கொள்ளலாமா. இன்னொருபுறம் டெஸ்ட் தரத்தில் முதலிடம் வகிக்கும் அவுஸ்ரேலிய



ஷேன்வோண் "சிரிப்பு வருகுதே"

அணியின் வியூகங்கள், தந்திரங்களுக்கு ஈடுகொடுக்கும் பலம் இலங்கை அணியிடம் இல்லையா?

இப்படியாகப் பல்வேறு கோணங்களில் வினாக்களை எழுப்பிச் செல்லலாம். இதற்கெல்லாம் ரசிகர்கள் சாதகமாகவும், பாதகமாகவும் கருத்துக்களைக் கொண்டிருப்பார்கள. என்றாலும், காலி டெஸ்ட் போட்டியில் சுழறபந்துவீச்சு முழு ஆதிக்கத்தையும் செலுத்தியிருக்கிறது என்பதையும், அவுஸ்ரேலியா ஒரு நம்பர் வன் அணிதான் என்பதையும் எவ்வித கருத்து வேறுபாடும் இன்றி எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள்.

**- காவேரி கிருஷ்ணா-**

## தம்மையே உணராத நிலைதான்

ஒரு பொதுமகன் - முன்னாள் பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளரும், எல்லோராலும் நேசிக்கப்படுபவருமான வசீம் அக்ரம் மீது சட்ட நடவடிக்கை எடுத்து வெற்றியும் கண்டுள்ளார். நடந்தது இதுதான்: இந்தியாவின் மதுபான நிறுவனம் ஒன்றிற்காக பல்வேறு நாடுகளின் எட்டு நட்சத்திர கிரிக்கெட் வீரர்கள் விளம்பரத்தில் தோன்றினார்கள். இந்த வகையில், இஸ்லாமிய மதக்கோட்பாடுகளுக்கு எதிராக மதுபானம் தொடர்பான விளம்பரமொன்றில் தோன்றியது இஸ்லாமியர்களின் மத உணர்வைப் புண்படுத்திய செயல் என்று பாகிஸ்தான் பொதுமகன் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். ஆனால், அக்ரம் இது தொடர்பில் நீதிமன்றில் ஆஜராகவில்லை. இதன்பின் நீதிமன்றம் எடுத்த நடவடிக்கையின்படி, அக்ரம் மன்னிப்புக் கோருவதுடன் குறித்தளவு பணத்தையும் அபராதமாகச் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஆனால், வசீமின் சட்டத்தரணி கருத்துக் கூறும்போது - நீதிமன்ற அழைப்பாணையொன்றும் வசீமுக்குக் கிடைக்கவில்லையென்றும், இல்லாதிருப்பின் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருப்பார் என்றும் கூறுகிறார். இதே வேளை - வசீம் கருத்துக்கூறுகையில், விளையாட்டு உபகரணங்களையும் தயாரிக்கும் ஒரு நிறுவனத்திற்கே தான் விளம்பரத்திற்குத் தோன்றியதாகத் கூறியுள்ளார்.

இதெல்லாம் ஒருபுறம் இருக்க, ஏதோ ஒருவகையில் விளம்பரங்கள் அத்துமீறிச் சென்று கொண்டிருக்கின்றன என்பதை மறுக்க முடியவில்லை. முன் எப்போதும் இல்லாத அளவில் விளையாட்டுத்துறையை, குறிப்பாக கிரிக்கெட் துறையை ஆக்கிரமித்துள்ளதை எல்லோரும் அறிவர். சில அரசாங்கங்கள் சிகரெட் விளம்பரங்கள் போன்றவற்றை ஒளிபரப்பக்கூடாதென்று கூட தடைவிதித்துவிட்டார்கள். இருந்தும் விளம்பரங்கள் படுமோசமான பாணியில் சென்று கொண்டிருக்கின்றன.

ஆபாசத்தை விற்றுப் பணமாக்கும் கைங்கரியம் மிகத் திட்டமிட்டு நடைபெறுவதாகவே எண்ணவேண்டியுள்ளது. தென்னிந்தியத் தமிழ்ப்படங்களை எப்படி குடும்பத்துடன் இருந்துபார்க்க முடியாதோ, அதே போல கிரிக்கெட் ஆட்டத்தின் இடையில் காண்பிக்கப்படும் விளம்பரங்களும் குடும்பத்துடன் இருந்து பார்க்க முடியாத நிலை ஏற்படும் போலவே தெரிகிறது.

இறுதியாக, ஒன்றை நடிகர் விவேக்கின் குரலிலேயே கேட்கலாம் "அப்துல் கலாமின் கட்டுரைக்கு மும்தாஜின் படம் எதற்கு"

**- செந்தூரம் -**



வசீம் அக்ரம் "கௌரவம் உயர்வானது"


## இன்று இதை நம்ப முடிகிறதா?

இன்னும் ஐந்தே ஐந்துமாதங்கள் தான் இருக்கின்றன. உலகின் உன்னதமான விளையாட்டுத் திருவிழா ஆகஸ்டில் கிரேக்க நாட்டின் எதென்ஸ் நகரில் நடைபெறப்போகின்றன. வேறென்ன 2004 ஒலிம்பிக்போட்டிகள் பற்றித் தான் குறிப்பிடுகிறோம்.

நாட்கள் நெருங்க நெருங்க தடகளச் செய்திகளும் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் முதன்மை பெற்றுக் கொண்டு வருகின்றன. அதுவும் பல்வேறு கோணங்களில், பல்வேறு கண்ணோட்டங்களில் பார்க்கப்படுகின்றன. இவற்றுள் சில ஆழ்ந்த சிந்தனைக்கு உரியன. இன்று விளையாட்டுத் துறையில் விஷமாகப் பரவியிருப்பது தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துப் பாவனை. இந்த நஞ்சு விளையாட்டுத்துறைகள் எல்லாவற்றிலும் ஊடுருவி இருப்பது இந்த நூற்றாண்டின் பெருங்கவலை.

ஒருகாலத்தில் கிழக்கு ஜேர்மன் வீரவீராங்கனைகள் பெரும் ஊக்க மருந்துப்பாவனைச் சர்ச்சைக்குள்ளானார்கள். அதன் பின் அண்மைக் காலம்வரை நிறையவே விளையாட்டு வீரர்கள் சகதியைப் பூசிக்கொண்டார்கள்.

மிக அண்மையில் பிரித்தானியாவின் 100 M வீரர் ட்வெய்ன் சேம்பர்ஸ், 100 M வீராங்கனை கெலி வைற், இதற்கு ஒரு தசாப்தம் முன்னதாகப் பென்ஜோன்சன், தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டவராவார். வீராங்கனை கிரிபித் ஜொய்னர் கூட இந்த ரீதியில் சந்தேகிக்கப்பட்டவர் தான்.



ஷேர்லி "கண்ணியம் முதல்"

தற்போது எல்லோராலும் அறியப்பட்ட மரியன் ஜோன்ஸ் உலக 100 M வீராங்கனை அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. ஆனால், மரியன் ஜோன்ஸின் முதல் கணவர் குண்டெறிதல் ஒலிம்பிக் வீரர். ஆனால், அவரும் ஊக்க மருந்தும் பாவனை தொடர்பில், குற்றவாளியாகக் காணப்பட்டு பதக்கம் பறிக்கப்பட்டவர். இதன்பின் என்ன காரணமோ தம்பதிகள் பிரிந்துவிட்டார்கள்.

இதன்பின் மரியன் ஜோன்ஸ், ரிம்மொண்ட் கொமரியுடன் நட்புப் பூண்டு வாழ்ந்து வருகிறார். இவர்கள் பென்ஜோன்சனின் ஊக்கமருந்துப் பாவனைக் குற்றச் சாட்டில் சம்பந்தப்பட்ட அவரின் பயிற்றுநரை தம் பயிற்றுனராக நியமித்துக் கொண்டமை, சர்வதேசரீதியில் அதிருப்தியாகப் பார்க்கப்பட்டது.

ஊக்கமருந்துப் பாவனை, அதற்கான பொருளாதார அவாக் காரணங்கள் என்று நீண்டுகொண்டே செல்லும்வேளையில் உணர்வு பூர்வமாக ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டி முடிக்கலாம்.

ஷேர்லி ஸ்ரீக்லண்ட் 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக் போட்டியில் - ஒலிம்பிக்டோர்ச் தாங்கியவர்களுள் ஒருவர் அண்மையில் காலமாகிவிட்டார். 1940/1950 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பல பதக்கங்கள் பெற்றவர். 1948 லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் 200 M ஓட்டப் போட்டியில் வெறும் கண்பார்வைத் தீர்ப்பின்படி நான்காவது இடம் என்று அறிவிக்கப்பட்டவர். ஆனால், தொழில் நுட்பம் வளர்ந்து வர, 1970 ஆம் ஆண்டுகளில் நவீன கமரா ஆய்வின் மூலம் இவர் வெண்கலப் பதக்கத்துக்கு (மூன்றாவது இடம்) உரியவர் என்று தீர்மானிக்கப்பட்டார்.

ஆனால் அவர், தனக்குரியதென உறுதிசெய்யப்பட்ட மூன்றாவது இடத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இவ்வளவு காலத்தின் பின் இப்படிச் செய்வது மூன்றாவது இடத்தைச் பெற்ற வீராங்கனையை எவ்வளவு மனத்துன்பத்துக்குள்ளாக்கும் என்று காரணமும் கூறிவிட்டார்.

இன்றைய அசிங்கமான விளையாட்டு வீரர்களின் மத்தியில் என்ன அழகான மனது இந்த அம்மணிக்கு

**- துஷ்யந்தன்.**

## ஏதோ நடந்தால் சரி

ஆசியக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் மீண்டும் நடைபெறும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான அரசியல் கருத்துவேறுபாடுகள் ஆசியக் கிண்ணத்தையும் பாதித்திருந்தன. 2000 ஆம் ஆண்டின் பின் இந்தக் காரணத்தினால் போட்டிகள் நடைபெறவில்லை.

தற்போது, ஜூலை 15 இற்கும் ஆகஸ்ட் முதலாம் திகதிக்குமிடையில் இலங்கையில் இந்தச் சுற்றுப்போட்டிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நான்கு டெஸ்ட் விளையாடும் நாடுகளான பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் தகுதிபெறும் இரண்டு நாடுகளாக மொத்தம் ஆறு நாடுகள் பங்கு கொள்ளவிருக்கின்றன.

ஆசியக் கிரிக்கெட் சம்மேளனத்தின் செயலாளர் அஷ்ரபுல் ஹக் கருத்துத் தெரிவிக்கையில் -

நீண்ட இடைவெளியின் பின் இந்தச் சுற்றுப்போட்டி நடைபெறுவது மகிழ்ச்சியாக இருக்கிறது என்கிறார். இதுவரை நடைபெற்ற போட்டிகளில் இந்தியா மூன்று முறையும், இலங்கை இரண்டு முறையும், பாகிஸ்தான் ஒருமுறையும், கிண்ணத்தை வென்றிருக்கின்றன.

**- ரூபா-**

# தயவு செய்து நா காக்க



டில்ஷான்
“தப்புத்தப்பாப் பேசி”

திலகரட்ண டில்ஷான் இலங்கை அணியின் புதிய துடுப்பாட்ட நட்சத்திரம். இவரும் அணிக்குள் வருவதும் போவதுமாகத்தான் இருந்தார். ஆனால், இன்று மத்திய வரிசையின் உயர் நம்பிக்கை இவரே.

இவர் இதுவரையில் தான் பெற்றுள்ள மூன்று சதங்களில் நடைபெற்று முடிந்த அவுஸ்ரேலியாவிற்கு எதிரான முதலாவது டெஸ்டில் பெற்ற 104 ஓட்டங்களே சிறந்தது என்கிறார்.

இதற்கான காரணத்தை இவர் கூறும்போது - உலகின் சிறந்த இரண்டு **LEG SPINNERS** மற்றும் வேகப்பந்து வீச்சாளருக்கு ஈடுகொடுத்து இந்தச் சதத்தைப் பெற்றுள்ளதாகக் கூறுகின்றார். காலி மைதான தடம் சுழற்பந்துவீச்சாளருக்குச் சாதகமானது. ஆனால், நான் இவர்களின் பந்துகளைச் சரியான முறையில் எதிர்கொண்டேன். பந்தைச் சரியான இடத்தில், விழ அனுமதிக்காவிட்டால், சுழற்பந்துவீச்சு வலுவிழக்கும். அதனையே நான் செய்தேன் என்கிறார் டில்ஷான்.

குறிப்பிட்டகால இடைவெளியின் பின்னர் இலங்கை அணிக்குள் இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் போட்டித் தொடரில் இவர்களும் இறங்கினார். இறுதி மூன்று இனிங்சில் இவர் பெற்ற ஓட்டங்கள் 63-100-83. தற்போது ஒரு 104. டில்ஷானின் சராசரி திருப்திகரமானதே. ஆனால், அவர் தொடர்ந்தும் கருத்துக்கூறும்போது, முதலாவது இனிங்சில் 200-250 ஓட்ட வித்தியாசத்தைப் பெற்றால், இந்தத் தடத்தின் தன்மையின் அடிப்படையில் அவுஸ்ரேலியாவை வெல்ல முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்திருந்தார். அதுதான் கொஞ்சம் ஓவராகப் போய்விட்டது.

- **மக்டலின்**-

# கொம்பியூட்டரில் காதல் செய்வோம்

விசேடமாக, தொலைக் காட்சியில் கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்ப்பவர்கள், அந்த நிகழ்வில் கணினியின் மாயா ஜாலங்கள் பற்றி நிறையவே கூறுவார்கள். இது இன்னொரு புதிய செய்தி. அதுவும் இந்திய - பாகிஸ்தான் தொடரின் முக்கியத்தை உணர்த்தும் வகையிலேயே வருவது இன்னும் குதூகலமா?



தவ்பீக் உமர் - யொகானா
“ஆரம்பமே அசத்தல்”

பாகிஸ்தானின் கிரிக்கெட் தொடர்பான கணினித்துறை நிபுணர் ஒருவர், இந்திய பிரபல்யமிக்க துடுப்பாட்டவர்களின் இயல்பு பற்றிய ஆய்வை கணினிமூலம் மேற்கொண்டு பாகிஸ்தான் பந்துவீச்சாளருக்கு உதவும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

**DATA BASE** முறைமைமூலம் அநேகமாக எல்லா நாடுகளும் நிறையப் பயன் பெற்றுள்ளார்கள். ஆனால், இதுபற்றிப் பாகிஸ்தான் இதுவரை அதிக அக்கறை செலுத்தாமை ஆச்சரியம்தான். ஆனால், பதினைந்து வருடங்களின் பின் இந்தியா, பாகிஸ்தானுக்கு வருகிறது என்றவுடன் கணினித் தொழில்நுட்பத்தைக்கூட உயர்ந்தளவில் பாவிக்கத் தீர்மானித்துவிட்டார்கள். இந்திய நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர்களான சச்சின் டெண்டுல்கர், ராகுல் டிராவிட், வெங்கடேஷ் லக்ஸ்மன், சௌவ்ரவ்கங்கூலி, போன்றவர்களை மடக்கப் பாகிஸ்தான் வைத்திருக்கும் படையணி சோஹெய்ப் அக்தார், மொகமட்சமி, சாபிர் அகமட். எனவே இவர்களையும் முழுநிலை பந்துவீச்சாளர் ஆக்க, கணினித் தொழில்நுட்பமும் பயன்படப்போகின்றது.

நாங்கள் இரண்டுவருடமாகவே இந்தியத் துடுப்பாட்ட வீரர்களின் பலவீனங்களை அறிந்து, அதற்கிசைவான திட்டங்களை வகுத்தே வந்திருக்கிறோம். இதெல்லாம் தற்போது எங்கள் பந்துவீச்சாளருக்கு மட்டும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம் என்று முடிக்கிறார்.

- **ரோஜா** -

# ஏமாற்றத்தை உணர்கின்றோம்

அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் என்றாலே எதிரணிக்கு ஒரு அலர்ஜிதான். ஆனால், பிரெட்லீ என்றால் அவர்மீதான லயிப்பு வித்தியாசமானது. அவரது வேகம் அதனுடன் இணைந்த ரிதம், அழகிய முகத்தோற்றத்துடன் இணைந்த புன்சிரிப்பு, விக்கெட் வீழ்த்தினால் அதனைத் கொண்டாடும் பாணி எல்லாமே ஒரு தில்தான்.

ஆனால், துரதிஸ்டம் லீயைத் துரத்துகிறது. ரசிகர்களும் ஏமாற்றத்துக்குள்ளாகப் போகிறார்கள். ஆம் பிரெட்லீ ஒரு டெஸ்ட் போட்டியில்கூட, பங்குகொள்ளாமல் அவுஸ்ரேலியா திரும்புகிறார். இது இலங்கை ரசிகர்களுக்கு நிச்சயம் மிகுந்த மனவருத்தம் அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.



பிரெட்லீ
“நல்ல மனிதன்”

டெஸ்ட் ஆட்டங்களுக்கு முன்னதான மூன்று நாள் ஆட்டத்தின்போது, அவருக்குக் கணுக்கால் உபாதை ஏற்பட்டது. இந்த இடத்திலேயே முன்னர் இவருக்குச் சத்திரசிகிச்சை நடைபெற்றிருந்தது. ஆனால், அடங்கியிருந்த உபாதை மீண்டும் ஆரம்பித்தபோது, தன்னால் தொடர்ந்தும் விளையாடமுடியும் என்ற நம்பிக்கையைத்தான் இழந்துவிட்டதாகக் கூறுகிறார் அவர்.

இலங்கையிலுள்ள அவுஸ்ரேலிய கிரிக்கெட் அதிகாரிகளும் அதனையே உறுதிப்படுத்தி பிரெட்லீயை அவுஸ்ரேலியா அனுப்பமுடிவு செய்துள்ளார்கள்.

பிரெட்லீ கருத்துக்கூறும்போது - இந்த உபாதைக்கு இறுதியானதொரு முடிவு காணவேண்டும். வேகப்பந்துவீச்சாளர்களின் கிரிக்கெட் வாழ்க்கையில் இதெல்லாம் சகஜம்தான்.

இருந்தும் திரும்பவும் விரைவில் ஆட்டங்களுக்குத் திரும்புவேன் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

- **சுஜாதா** -

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

**01. டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட்டுக்களுக்குமேல் சரித்துள்ள சுழற்பந்துவீச்சாளர் யார்?**

**02. வடக்கின் கிரிக்கெட் போர் எந்தெந்த அணிகளுக்கிடையில் நடைபெற்றுவருகிறது?**

**03. கரிபியன் தீவுகளில் மேற்கிந்திய அணிக்கு எதிராக கிரிக்கெட் போட்டியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நாடு எது?**

**விளையாட்டுப் புதிர் - 03**

**விண்ணப்பப்படிவம்.**

முழுப்பெயர்:- ............................................

முகவரி:- ............................................

01.

02.

03.

**விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 19.03.2004 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.**

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 03,*
*நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

## விளையாட்டு புதிர் இல. 02 இன் விடைகள்

1) பாகிஸ்தான்.
2) ஸ்கந்தவரோதயாக்கல்லூரி - மகாஜனாக் கல்லூரி.
3) பெல்ஜியம்.

பரிசு பெற்றவர்
லோ.ரகோஜன்
54/14 ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
SPORTS ‘T சேட்’.

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2227648, 0777166894.

# மனச்சாட்சியாகவே இருக்கட்டும்

இலங்கையைச் சேர்ந்த நடுவர் பீற்றர் மனுவல் - தன்னால் ஆட்டம் இழந்ததாக அறிவிக்கப்பட்ட அவுஸ்திரேலிய வீரர் அன்ரூ சைமன்சை மீள அழைத்தமை அவருக்குப் புகழாரத்தைச் சேர்த்தது என்னவோ உண்மை தான். ஆனால், கனதியான கிரிக்கெட் விமர்சகர்கள் எத்தனை கோணத்தில் இந்த விடயத்தைப் பார்க்கிறார்கள் என்பது வியப்பாக இருக்கிறது. இந்த விடயம் பற்றி ஒரு கிரிக்கெட் விமர்சகரின் கருத்துக்களைப் பார்ப்பது சுவையாக இருக்கும்.



வசீம் அக்ரம்
“கேட்டதும் கொடுக்கணுமா”

**LBW** முடிவுகளை நடுவர்கள் தன்நம்பிக்கையுடன் கையாள முடியாமற்போனால், எதிர்காலத்தில் இவற்றை முற்றுமுழுதாக இலத்திரனியல் கருவிகளிடம் ஒப்படைக்க வேண்டிவரும். இந்த நிலையானது நடுவரை மைதானத்தின் நடுவே நட்டுவைத்த வெறும் தடி என்ற நிலைக்குக் கொண்டு போய்விடும் என்பது ஒரு கருத்து.

மேற்படி சம்பவத்தில் பீற்றர் மனுவலின் பக்கம் நின்ற கில்கிறிஸ்ட்டின் அதிருப்தி நடவடிக்கை நடுவர் பிழைவிட்டுவிட்டோம் என்ற உணர்வை ஏற்படுத்தி, அதனை நடுவர் திருத்திக் கொள்ள முனைந்தாரா? அதேபோல் அவுட் என அறிவிக்கப்பட்ட சைமன்சின் நடவடிக்கைகளும் மீள்பரிசீலனைக்கு உதவியதா? அல்லது ரசிகர் மத்தியில் இருந்து எழுந்த அதிருப்தி நிறைந்த அல்லது ஆரவாரம் நிறைந்த குரல் ஒலிகள், நடுவர் தன் முடிவை மீள் பரிசீலனை செய்யக் காரணமாக அமைந்ததா?

இவை ஏதாவது ஒன்று அந்த நடுவரின் மனநிலையில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தி, அதன காரணமாகச் சைமன்சைத் திருப்பி அழைத்திருந்தால், அது கிரிக்கெட்டுக்குப் பாதகமானது. ஏனெனில், எதிர்வரும் காலங்களில் இப்படியான சந்தர்ப்பங்களில் துடுப்பாட்டவீரர் சிலநாடகங்களை அரங்கேற்ற முயலலாம். ஏன், பயிற்றுநர்கூட நாடக ஒத்திகையை நடாத்தி மைதானத்துக்கு அனுப்பலாம்.

எனவே முடிந்த முடிவாக ஒன்றை உறுதிப்படக்கூடிய முறையில் கூறமுடியும். சம்பந்தப்பட்ட நடுவர் வேறு எந்தவிதப் புறச் சலனங்களுக்கும் இடங்கொடாமல், அவை எவற்றையும் கருத்திற்கொள்ளாமல் தன் மனச்சாட்சி ஒன்றை மட்டும் முதன்மைப்படுத்தி, அந்த முடிவை எடுத்திருந்தால், அது ஏற்றுக்கொள்ளக் கூடியதே. அவ்வாறு இல்லாமல் இருந்தால், எதிர்காலத்தில் பல அவலட்சணமான காட்சிகளை மைதானத்தின் மத்தியில் பார்க்கவேண்டிய கொடுமை ரசிகர்களுக்கு ஏற்படும்.

~ **ஜோசப் கிருஷ்ணா** ~

குமுறல்...

# யாழ். மண்ணிலே முதன் முறையாக...

செ.யோகநாதன்

அண்மைக் காலமாக பத்திரிகை விளம்பரங்களிலும், துண்டுப் பிரசுரங்களிலும் யாழ். மாவட்டத்தில் என்ற தலையங்கத்தோடு பல அறிவிப்புகள் வருவதை நாம் பார்த்துவருகின்றோம். இந்த அறிவிப்புகள் கூடுதலாக தமிழகத்திலிருந்து வரும் ஜோதிடர்கள், அழகுக் கலை நிபுணர்கள் பற்றியதாகவே காணப்படுகின்றது. இவை புதிய புதியவர்களின் பெயரோடு தொடர்ச்சியாக விளம்பரப் [illegible] ட்டு வருகின்றன. யாழ். மாவட்டத்தில் இவர்கள் காலடி எடுத்து வைத்தது இந்த மண்ணிலே வாழுகின்ற மக்கள் பூர்வ புண்ணியம் செய்ததன் விளைவாக ஏற்படுகிறது என்ற அர்த்தத்தை இந்த விளம்பரங்கள் தெரியப்படுத்துகின்றன. நிதானமாக யோசித்துப் பார்த்தால் யாழ்ப்பாணத்தினுடைய இப்போதைய வாழ்க்கை முறையைத் தெரிந்துகொண்ட எந்த மனிதனுக்கும் இந்த விளம்பரங்கள் எரிச்சலும், கோபமும் ஊட்டுவதாகவே அமைகின்றன. அத்தோடு யாழ். மக்களின் சுயகௌரவத்திற்கும், அவர்களின் ஆளுமைக்கும் அவமானம் சேர்ப்பனவாகவே இந்த விளம்பர நிகழ்வுகள் அமைகின்றன.

கடந்த இரு தசாப்த காலமாக யாழ்ப்பாண மக்கள் அனுபவித்துவரும் துயரங்களும், இழப்புகளும் சொல்லுக்கு அடங்காதவை. வீடு வாசலை இழந்து காடுகளிலும், வாழமுடியாத இடப்பரப்பிலும் இந்த மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் பல குடியிருப்புகள் உயர் பாதுகாப்பு வலயத்துள் அடக்கப்பட்டு சொந்த நிலம் என்றில்லாமல் இவர்கள் படும் வேதனை என்பது யாழ்ப்பாணத்தில் வீசும் காற்றில் கேட்கின்ற அழுகுரல் ஆகும். தமது வளம்கொழிக்கும் பாரம்பரியமான வயல் பிரதேசங்களையும்,தொழில் இடங்களையும், மீன்பிடி எல்லைகளையும் இவர்கள் இழந்து துயருடன் இருக்கிறார்கள்.

யுத்தத்தினால் தங்களுடைய குடும்பத் தலைவரை இழந்த பெண்களின் வாழ்க்கை எந்தவிதமான நிவாரணமும் இல்லாமல் துன்பத்தில் கழிந்துகொண்டு இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் மட்டும் 23079 விதவைகள். இத்தகைய அவல வாழ்வுக்கு உட்பட்டு இருக்கிறார்கள். உடல் ஊனமுற்றவர்கள் 1308 பேர்வரை வாழ்க்கையின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கை அற்றவர்களாய் உழன்றுகொண்டிருக்கிறார்கள்.

தொழிலும் வாழ்விடமும் இழந்த காரணத்தினால் வருவாய் இல்லாமறபோன 1 36 247 குடும்பங்கள் இற்றைவரை இலவச உலருணவு நிவாரணத்திலேயே வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் 70 நலன்புரி நிலையங்கள் இருப்பதாக அறியமுடிகிறது. இந்த நலன்புரி நிலையங்களில் நீர் - மலசலகூட வசதிக்காகவே பல தொண்டு நிறுவனங்களிடமிருந்து பணத்தை இரந்து கேட்கவேண்டிய சூழ்நிலையுள்ளது.


யாழ்ப்பாண மாவட்டத்தின் பெரும்பாலான வீதிகள் மின்சாரம் இன்மையினால் இருளில் மூழ்கியுள்ளன. இதனால், எண்ணற்ற சமூக விரோதப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. காடைத்தனங்கள் அமைதியான மக்களிடையே அச்சத்தை விளைவிக்கின்றன. சூனியப் பிரதேசங்களில் வாக்குச் சாவடிகளை நடத்தமுடியாமல் மிதிவெடிகளும், கண்ணிவெடிகளும் பயமுறுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் பல பகுதிகளிலும் உள்ள மருத்துவ நிலையங்கள் சீரழிந்துபோய் பொதுமக்கள் மருத்துவ வசதியின்றி தத்தளிக்கின்றனர்.

இத்தகைய வாழ்க்கை முறைக்கு நடுவே சின்னஞ்சிறிய ஒளிக்கீற்றுகளாகத்தான் மக்கள் நம்பிக்கையோடு இருந்துவருகின்றனர். மக்கள் தங்களுடைய வாழ்க்கையின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும், தங்களுடைய பாதுகாப்புக் குறித்த எதிர்பார்ப்பையும் இவர்களிடமிருந்தே எதிர்பார்த்துள்ளனர்.

மேலே குறிப்பிட்டவையே இன்றைய யாழ்ப்பாணத்தின் நிலைமைகள். யாழ்ப்பாண மக்கள் தங்கள் எதிர்கால வாழ்க்கைப் பிரகாசத்தைப் பற்றிய எதிர்பார்ப்பில்தான் தங்களுடைய துன்பங்களையெல்லாம் சகித்துக் கொண்டு வாழ்கிறார்கள். தங்களுடைய வாழ்க்கையில் ஒளிமயமான நிகழ்வுகள் திரும்பவும் வரும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்துள்ளனர். அதற்கான முன்னேற்பாடுகளாக தங்களைப் பாதுகாத்துவருவோரை பின்பற்றுவதில் இந்த மக்கள் அக்கறை கொண்டுள்ளார்கள். இவர்களுடைய கவனமெல்லாம் இதை நோக்கியதாகவே இருந்துவருகின்றது. தங்களுடைய மக்களின் நல்வாழ்வுக்காக உயிரைத் தியாகம் செய்த போராளிகளுடைய ஞாபகத்தோடு தங்களுடைய வாழ்க்கையை எளிமையான முறையில் செலுத்தவேண்டும் என்று இவர்களில் பெரும்பாலானோர் செயற்படுகிறார்கள். இந்த வரலாற்றை அறியாத மிகச் சிறுபான்மையினர் இன்றைக்கு பல மக்கள் விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

உலக நாடுகளெல்லாம் தமிழரின் இந்த வாழ்க்கையை அறிந்துவைத்திருக்கின்றனர். இந்த சூழலில் வெளிநாட்டுக்குச் சென்று சிலர் தமது தாய் மண்ணிற்கு திரும்பவந்து செய்கின்ற அலங்கோலமான செயல்கள் தமிழரின் வரலாற்றில் கறைபடிவனவாகவுள்ளன. தமிழரின் விடுதலைப் போராட்டமே இவர்களைப் பிற நாடுகளுக்கு தஞ்சம் புகுந்தவர்களாக மாற்றியது. அங்கே சென்ற இவர்களில் சிலர் அங்கே சம்பாதித்து வந்த பணத்தை இங்கே கொண்டுவந்து சீர்கெட்ட விதத்திலே செலவிடுவதன் காரணமாக இங்கே வாழ்கின்ற மக்களோடு பல முரண்பாடுகளைக் கொண்டதாக இருக்கிறார்கள். அலங்கோலமான உடைகள், கேவலமான வாழ்க்கை நெறிகள் என்பவற்றையும், முட்டாள்தனங்களையும் யாழ். மண்ணிலே கொண்டுவருவதற்கு இவர்களும் ஒரு காரணமாவார்கள். இதன் விளைவே இப்பொழுது யாழ். மண்ணிற்கு முதன்முறையாக வந்து குவியும் ஜோதிட, அழகுக் கலை, திரைப்பட தயாரிப்பாளர்களின் வருகையாகும்.

மேற்கூறியவர்களின் வருகை எமது கலாசார சீரழிவுக்கு அடியெடுத்துக்கொடுக்கும்



என்பது மட்டுமல்ல. எங்கள் மக்களைப் பற்றி வெளியுலகிலுள்ளோர் தவறாக அர்த்தம் கொள்ளவும் காரணம் ஆகிவிடும். மேலே கூறிய யாழ்ப்பாண சூழ்நிலையில் இங்கு வாழும் மக்களுக்கு உதவி செய்வதற்கும் உற்சாகம் கொடுப்பதற்கும் மனிதர்கள் தேவை. மாறாக அன்றாட வாழ்க்கைக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருப்போரிடம் 'அழகுக் கலையைக் கற்பிக்கிறோம் வா' என்று சொல்வதும். 'உன்னுடைய எதிர்காலம் பற்றி ஜோதிடம் சொல்கிறோம்' என்று சொல்பவர்களும் 'உங்கள் வாழ்வை அடிப்படையாக வைத்து திரைப்படம் தயாரிக்கிறோம் வா' என்று கூறுபவர்களும் நமது மக்களை அவமானப்படுத்துபவர்களாகவே நாம் அடையாளம் காண்கிறோம்.

யாழ். மண்ணிலே முதன் முறையாக வருகிறோம் என்று சொல்கின்ற ஜோதிடர்கள் பலர் தங்களைப்பற்றிக் கூறுகின்ற பல விடயங்கள் அப்பட்டமான பொய்கள். சென்னை நகர வீதிகளிலிருந்து ஜோதிடம் சொன்னவர்கள் எல்லாம் இன்றைக்கு யாழ்ப்பாணத்திற்கு வந்து தங்களை ஜோதிடப் பேராசான்கள் என்று சொல்லிப் பணம்பறிக்கும் கொடுமை மிகக் கேவலமானது. இது போலவே இந்தியாவில் கலாசார சீரழிவுக்கு வித்திடுகின்ற நகரங்களிலிருந்து வரும் பலர் தங்களை அழகுக் கலை நிபுணர்களாக விளம்பரப்படுத்தும் பொய்மையும் எமது மக்களை எரிச்சலூட்டுவதாகவுள்ளது. அழகுக் கலை பயிற்சி என்ற பெயரில் பகற்கொள்ளை நடத்தப்படுவதாக பரவலாகவே பேசிக்கொள்ளப்படுகிறது.

இவர்களை இங்கே வரவழைத்து வருபவர்கள் யார்? இவர்கள் இங்குள்ள மக்களின் அவலத்தைப் போக்குவதற்காக ஒரு துரும்பைத் தன்னும் எடுத்துப் போவதற்கு எப்போதாவது யோசித்திருக்கிறார்களா? நன்றாக யோசித்துப் பார்க்கும்போது எமது மக்களுக்கு எந்த உதவிகூடச் செய்யவேண்டாம். ஆனால், இந்த மக்களை இவர்களின் செய்கையில் அவமானப்படுவதையும், எரிச்சலடைவதையும் நிறுத்திக்கொண்டால் அதே பேருபகாரமாக இருக்கும்.

இத்தகைய செயற்பாடுகளுக்கு தங்களது பணத்தை அள்ளி இறைப்போர் தங்களைச் சூழவுள்ள தங்களின் சகோதரர்களது நிலைமையைப் பார்த்து தங்கள் மனச்சாட்சியைக் கேட்டு இத்தகைய மோசமான நிகழ்ச்சிகளுக்க ஆதரவு கொடுப்பதை நிறுத்திக்கொள்வது நல்ல காரியமாகும். காலம் என்றும் எல்லாவற்றையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பதில்லை.

அறிவியல்...

# இணையத்தளம் தொடர்பான அறிவினை தமிழ் ம்க்கள் பெறவேண்டிய தேவையில்...

த.அறிவன்

பார்வைகள் - பதிவுகள் - பகிர்வுகள். திரு.த.திரு ஊடக கோலியாத்களை சில தாவீதுகள் முறியடிக்கின்ற ஒரு களத்தை இணையம் (INTER NET) உருவாக்கியுள்ளது. நம் உள்ளூர் ஊடகவியலாளர்கள் சிலருடன் இணையம்பற்றி உரையாடிக் கொண்டிருந்தோம். மிகச் சாதாரணமாகவே உரையாடிக்கொண்டிருந்தோம்.

இந்தவேளையில்தான் இணையம் எத்துணை அரக்க ஊடகங்களின் பரப்புரையைத் தகர்க்க அல்லது அவற்றின் சர்வாதிகாரத் தன்மையை உடைத்தது என்பது தெரியவந்தது. இணையத்துக்கு முன்பு மிகப்பெரிய நிதி பின்னணியில் பெருங் கட்டமைப்புடன் மட்டுமே ஊடகங்கள் நடத்தப்பட்டன. ஒன்று அரசிடமோ அல்லது நிதி வசதி கொண்டோரிடமோ தான் ஊடகங்கள் இருந்தன. இதனால் அவைதான் எந்தவொரு கருத்தையும் கட்டியெழுப்புபவை.

தமிழ்மக்கள் பிரச்சினை தொடர்பில் ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்களை B.B.C பிரதிபலித்ததால் தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளைக்கூட B.B.C சிந்தனையின்பாலே பிரதிபலித்தனர். அதனால் தமிழீழமக்களின் சிந்தனை B.B.C சிந்தனையாக இருந்தது. மற்றொரு கட்டத்தில் வெரித்தாஸ் மணநிலையாக இருந்தது. ஆக ஊடகங்கள் எப்படி மக்களின் கருத்தை தீர்மானிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். உலகளவில் B.B.C, C.N.N ஆகிய இரு ஊடகங்களே மக்களின் கருத்தைக் கட்டியாழ்வன. சதாம் ஹுசைனை பெரியவராக்கியதும், பயங்கரவாதியாக்கியதும் உலகப்புகழ்பெறவைத்ததும் கடைசியில் ஒருமிருகத்தைப் போல் நடத்தியதும் B.B.C யும். C.N.Nனும் தான். இப்படியான தன்மை தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பில் இருந்தது. தமிழ் விரோதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கட்டியெழுப்புவது அரக்க ஊடகங்களின் பணியாக இருந்தது.

தமிழர்களிடம் நாளேடுகள் இருந்த போதிலும் 1980 களின் நடுப்பகுதி வரை அவை தமிழ்த்தேசியத்தின்பால் உறுதியாக முழுமையாக செயற்படவில்லை. இப்பொழுது பிரமாண்ட இராட்சத ஊடகங்களின் பரப்புரை மிக இலகுவாக இணையங்களூடாக தகர்க்கப்படுகின்றன. உதாரணமாக உலகின் ஆரம்பநிலையிலுள்ள விடுதலை இயக்கங்கள் முதல் பெருவளர்ச்சி கண்டவைகளும், சில தனிநபர்களும்கூட இணையத்தள ஊடகங்கள் வழி கருத்துகளை முறியடிப்பதிலும், கட்டிவளர்ப்பதிலும் வெற்றிகரமாக ஈடுபட்டுள்ளன. ஒரு விடுதலை அமைப்பு தனக்கெதிரான 'ஒடுக்கு ஊடகங்களின்' கருத்தை மறுத்து உடனடியாகவே உலகம் முழுவதும் இலகு வாக உண்மையை வெளியிடும் வழி இணையங்களூடாகவே சாத்தியமாகின்றது.

இன்று இலங்கைத் தமிழ் ஊடகங்களான நாளேடுகளை முந்திக்கொண்டே கூட செய்திகள் வர உடனுக்குடன் செய்திகளை உலகம் முழுமைக்கும் கொண்டு செல்லும் புதினம் தமிழ்த் செய்தித்தளம், தமிழ்நாதம், தமிழ் இணையத்தளங்களின் இணைப்புத்தளம் என்பன அதிக மக்களால் நுகரப்படுகின்றன.

ஆங்கிலத்தில் ஈழத் தமிழர்களின் செய்திகளை உடனுக்குடன் வெளியிடும் தமிழ் நெற் இன்று உலகில் தமிழ் அல்லாதோரால் அதிகளவில் வாசிக்கப்படும் இணையமாகும். விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் உடனுக்குடன் தனது இணையத்தளம் ஊடான தகவல்களை வெளியிடுகின்றது. இப்படியாக இணையத்தளம் INTERNET இராட்சத ஊடகங்களின் கருத்துக்களைத் தகர்ப்பதற்கு எவராலும் பயன்படுத்தத்தக்கதாகி உள்ளது. மிகக் குறுகிய செலவில் இதனைச் செய்யமுடியும். இன்றுள்ளது இணைய உலகம் அதுபற்றிய அறிவினை தமிழ் மக்கள் அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

## வரலாற்று பொறுப்பை நிறைவேற்றவேண்டி தருணம்...

1977 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழீழமக்கள் அனைவரும் - தமிழீழத்துக்கான ஆணையை தேர்தல்மூலம் வழங்கியதே இன்றுவரை தமிழீழ விடுதலைப போராட்டத்துக்கு தமிழ் மக்கள் வழங்கிய தேர்தல் அங்கீகாரமாகும்.

1977 ஆம் ஆண்டில் இத்தேர்தல் நடைபெற்ற வேளையிலேயே தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் தலைமையிலான ஆயுதரீதியான போராட்டம் முனைப்புற ஆரம்பித்துவிட்டது. அக்காலத்தில் வேறும் சில ஆயுதப்போராட்ட இயக்கங்களும் இயங்கின. ஆனால் அவையாவும் அதிலிருந்து ஓய்ந்தும் திசைதிரும்பியும், அக முரண்பாடுகள், அந்நிய தலையீடு என்பவற்றால் சிதைந்தும் விட்டன. ஆயுதப்போராட்டம் தமிழீழ விடுதலைக்காக முனைப்புப்பெற்ற வேளையில் 1977 மக்களாணை வழங்கப்பட்டது. அந்த மக்களாணைக்காலத்தில் இன்றுள்ளது போன்ற நிலை இருக்கவில்லை. இந்த மக்களாணையை அடுத்து 1978 ஆம் ஆண்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழ் மக்கள் மீது இராணுவ கொடுரத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளார். இதன்மீது தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் தலைமையிலான விடுதலைப் போராட்டம் 1978 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக மேற்கொண்ட தீரமிகு ஈகம் நிறைந்த எதிர் நடவடிக்கைகளின் விளைவாக தமிழ் மக்கள் இராணுவ ரீதியிலான வெற்றிகள், மேலாண்மை, பலம்பெற்றுள்ள நிலையில் சர்வதேச தலையீடு, அங்கீகாரம், அனுசரணையை பெற்றுள்ள சூழலில் ஒரு இடைக்கால நிர்வாக அலகை முன்வைத்து அதனை நிபந்தனையுடன் பெற்றுக்கொள்ளக்கூடிய அதற்கு சர்வதேச அழுத்தம் இலங்கை அரசாங்கத்துக்கு கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில் இந்தத் தேர்தல் எதிர்கொள்ளப்படுகின்றது. 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை தீர்மானப்படி 1977 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ் மக்கள் தமிழீழத்துக்கு ஆணை வழங்கியது போல 2004 ஆம் ஆண்டு தேர்தலையும் தமிழ் மக்கள் கையாளவேண்டிய வரலாற்று நெருக்கீடு ஏற்பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பண்ணாகத்தில் தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாடு ஒன்றை நடத்தியது.

இதில் தாயக தமிழ் கட்சிகள், முஸ்லிம் கள், மலையக கட்சிகள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பன இணைந்திருந்தன. இதில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சுதந்திரமானதும் - சமயச்சார்பற்றதும், இறைமையுடையதும், ஆன சோசலிச தமிழீழ அரசொன்றும், அதற்கான அரசமைப்பொன் றும் மீளமைக்கப்படவேண்டும். அது ஒவ்வொரு குடிமகனதும் சுயநிர்ணய உரிமையை பாதுகாப்பதாகவும், ஒவ்வொரு தமிழனதும் பாதுகாப்பான வாழ்க்கைக்கு உத்தரவாதம், இன்றியமையாததாகவும் அமையவேண்டும் என அத்தீர்மானம் அமைந்துள்ளது. இதனையே தமிழ் மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளனர். இதுவே 1977 ஆம் ஆண்டு தேர்தலில் முன்வைக்கப்பட்டது. இதற்கான ஆணையையே 1977 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கியிருந்தனர். மக்கள் ஆணை வழங்கப்பட்ட போதும் மிதவாத தமிழ் அரசியல்வாதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை. 1981 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் 1981 ஆம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு என்பவற்றிலும் இதனை மீள தமிழ் மக்கள் வலியுறுத்தினர். தமிழீழ தீர்மானத்தை நிறைவேற்றிய அரசியல்வாதிகள் அதனை நிறைவேற்றக்கூடிய வலுவுடன் இல்லாது திசை திரும்பவிட ஆயுதப் போராட்டமே அதற்கான ஈகங்களை செய்து அர்ப்பணிப்புகளுடன் அதனை நிறைவேற்ற உழைத்தது. தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் தலைமையிலான விடுதலைப் போராட்டமே இதனை இறுதிவரை இலக்காகக் கொண்டு உழைக்கின்றது. இதன்பால் அதிக அர்ப்பணிப்புகள் ஈகங்கள் புரியப்பட்டன. இலங்கைத்தீவில் முதல்தடவையாக தமிழர் படையணி அந்நியரின் இராணுவ மேலாண்மையை வீழ்த்தி எழுச்சிபெற்று சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளது - தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் தலைமையில்தான். இதனால் இன்று தமிழ் மக்கள் உரிமை மறுக்கப்பட்டவர்கள் என்பதை உலகமே ஏற்றுள்ளது.

அதேவேளை தமிழ் மக்கள் உரிமைக்காக ஒரு கருத்து வாக்கெடுப்பு மூலம் தாம் தயார் என்பதை தெரிவிக்கவேண்டிய கட்டாயமும் உள்ளது.

பொங்கு தமிழ் மூலம் தமிழ் மக்கள் தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை தமக்கு தேவை என்பதை ஒன்றுதிரண்டு தெரிவித்துவிட்டனர். ஆனால் உலகம் அங்கீகரிக்கப்பட்ட வாக்களிப்பு முறையையே ஏற்றுக்கொள்ளும். அரசோ தமிழ் மக்களிடம் இதற்கேற்ப கருத்து வாக்கெடுப்பை நடத்தப் போவதில்லை இந்தச் சூழலில் 1977 ஆம் ஆண்டில் போல இலங்கை நாடாளுமன்றத் தேர்தலையே தமக்கான கருத்து வாக்கெடுப்பாக தமிழீழ ம்க்கள் மாற்றுகின்றனர். தமிழ் மக்கள் இதுவரைகால வரலாற்றில் தம் ஈகம் அர்ப்பணிப்பு, இழப்புகள் சாட்சியாக வளமான எதிர்காலத்துக்காக இந்த பங்களிப்பை மேற்கொள்ளவேண்டும். எத்தகைய தடைகளை அரசு போடினும் தமிழ் மக்கள் தம் கருத்தை உறுதியாக வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது.

அவர்கள் தம் வரலாற்றுக் கடப்பாட்டை நிறைவேற்றுவர் என்பதும் உண்மை.

திரு.த.திரு

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்
காத்துஓம்பல் சொல்லின்கண் சோர்வு.

திருக்குறள்

# நமது நோக்கு

## பொய்ப்பிரசாரங்களும் அரசியல் வன்முறைகளும்...

கொழும்பிலிருந்தும், ஏனைய தென்பகுதிகளில் இருந்தும் கிடைக்கும் செய்திகளின்படி தேர்தலுக்கான நாள் நெருங்க நெருங்க அரசியல் வன்செயல்களும், பழிவாங்கல் நடவடிக்கைகளும் மட்டுமல்ல - ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரின் அதீத பொய்ப்பிரசாரங்களும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாக இருவாரங்கள் வரை ஒரு பரபரப்பான - சந்திரிகா தலைமையிலான கூட்டணிக்குச் சார்பான அலையொன்று உருவாவது போன்று ஒரு மாயத்தோற்றம் ஏற்பட்டாலும், தற்போது அந்த அலை ஓயத்தொடங்கி தேர்தல் களத்தில் ஒரு மந்தமான அரசியல் நிலையே காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

ரணில் - சந்திரிகா ஆகிய இருவர் தலைமையிலான கூட்டணிகளும் சமாதானம் மற்றும் பேச்சுவார்த்தை தொடர்பான விடயங்களை தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் முக்கிய அம்சமாக வெளியிட்டாலும் கூட இரு தரப்பினரும் இவ்விடயத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக தீர்க்கமான தமது நிலைப்பாடெதனையும் தெரிவிக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

இந்த வகையில், ரணில் விக்கிரமசிங்க தான் ஆட்சிக்கு வந்தால் விடுபட்ட சமாதான முயற்சிகள் உடனடியாகத் தொடரப்படும் எனவும், இல்லையேல் அது சாத்தியமற்றுப் போய் மீண்டும் நாட்டில் அவலநிலையை உருவாக்கும் தன்மை கொண்ட யுத்தம் ஏற்படும் எனவும், தற்போதைய சமாதான நகர்வுகளை வெளிப்படையாகவே எதிர்த்து வந்த ஜே.வி.பியினருடன் கூட்டணி அமைத்துள்ள நிலையில், அவர்களின் அபிலாஷைகளுக்கு விரோதமாக சந்திரிகாவினால் சமாதான முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து தொடரவே முடியாதென அவர் திட்டவட்டமாகக் கூறிவருகிறார்.

தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான நாளிலிருந்து சந்திரிகாவின் ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமரும், ஜே.வி.பியின் விமல் வீரவன்ச மற்றும் அவர்களது லண்டன் வாழ் தலைமறைவுத் தலைவரான சோமவன்ச அமரசிங்கவும் கூறிவரும் கருத்துக்கள், சந்திரிகா கூறிவரும் கருத்துக்களுடன் நாளுக்குநாள் முரண்பட்டுக்கொண்டே வருவதையும், சுதந்திர முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகளுடனும், ஏனைய குழுக்களுடனும் நிபந்தனைகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என தெரிவித்திருப்பதையும் பார்க்கும்போது சமாதான முயற்சிகளின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிவிடும் கொள்கைகளையே சந்திரிகா கூட்டணி வரித்துக் கொண்டுள்ளது என்பதைத் தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது.

இந்த நிலையில், தென்பகுதியில் அதிகரித்துவரும் வன்முறைகளால் மக்கள் மத்தியில் பீதியும், வெறுப்பும் அதிகரித்து வருவதுடன் அரசியல் கட்சிகளின் மூன்றாம்தர பொய்ப்பிரசார்ங்களும் உச்சக்கட்டத்தை அடையத் தொடங்கியுள்ளன.

நாடாளுமன்றத்தில் இரு பெரும் சிங்களக் கட்சிகளுமே அறுதிப் பெரும்பான்மை பலத்தை உறுதியாகப் பெறுவதென்பது சாத்தியமாகும் நிலை இல்லாத நிலையில், மற்றுமோர் பலவீனமான தொங்கு நாடாளுமன்றமே அமையக் கூடிய சூழ்நிலை உருவாகும் என்றே கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சந்திரிகாவின் வசம் சிக்கியுள்ள ஊடகத்துறை அவரினதும் அவரது கட்சிக் கூட்டணிக்கும் ஊதுகுழலாகவே அதற்குப் பொறுப்பான லக்ஷ்மன் கதிர்காமரால் மாற்றப்பட்டுள்ளது. உண்மைக்குப் புறம்பான பொய்யானதும், புனைந்துரை செய்யப்பட்டதுமான செய்திகளால் மக்கள் மத்தியில் குழப்பத்தையும், சஞ்சலத்தையும் ஏற்படுத்தும் நடவடிக்கைகளையே திட்டமிட்ட வகையில் அரச சார்பு ஊடகங்கள் மேற்கொண்டுவருவதாக ஐ.தே. முன்னணியினர் குற்றம்சாட்டி அந்த ஊடகங்களை பிரசாரத்துக்குப் பயன்படுத்தாது புறக்கணித்துவருகின்றனர்.


கதிர்காமரின் 'பொய்மை'யுணர்வு இப்போதுதான் அவர்களுக்கு உறைக்கத் தொடங்கியுள்ளது.

இதேவேளை, கிழக்கு நிலவரம் குறித்து அரச ஊடகங்கள் செய்துவரும் விஷமத்தனமான பிரசாரங்கள் அவற்றின் கீழ்த்தரமான பக்கச்சார்பு அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றது.

தமிழ்த்தேசியத்தின் கூட்டமைப்பையும், தமிழினத்தின் ஒருமைப்பாட்டையும், தமிழ்த் தேசியத் தலைமைத்துவத்தையும் சிதைக்க அரசு சார்பு ஊடகங்கள் மூலமாக கதிர்காமர் மேற்கொண்டுவரும் பொய்ப்பிரசார நடவடிக்கையின் மூலம் தமிழினத்தைக் கூறுபோட்டு தேர்தலில் அவர்களின் குரல் ஒருமித்து ஒலிப்பதை தடுக்க முயற்சிப்பதை வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தெளிவாக உணர்ந்து அவரது அபத்த முயற்சிகளை தூக்கியெறிய வேண்டியது முக்கிய வரலாற்றுக் கடமையாகும்.

இனவாதம், பிரதேசவாதம் போன்றவற்றை தேர்தலுக்கான பிரசார உத்தியாகப் பயன்படுத்தி அரசியல் இலாபம் காணமுனையும் தேசவிரோத, சமூக விரோத சக்திகள் பொய்ப்பிரசாரங்கள், வன்முறைகள் மூலம் தமது இலக்கினையடைய வடக்கு - கிழக்கு மக்கள் எந்தவகையிலும் அனுமதிக்கக்கூடாது.

## நாடும் நடப்பும்




## வன்னி மக்களின் வாக்களிப்புத் தொடர்பாக

# தேர்தல் ஆணையாளரினால் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை!

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

வன்னியிலுள்ள வாக்காளர்கள் வாக்களிப்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் இதுவரை எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காமல் இருப்பது எமக்கு மனவேதனையளிக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்று மாட்டின் வீதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வாக்களிப்பது தொடர்பாக வேட்பாளர் எவ்வாறு மக்களுக்கு விளக்கிக் கூறவேண்டும். பிரசாரக் கூட்டங்களை எவ்வாறு ஒழுங்குபடுத்த வேண்டும் என்பது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அனைவரும் செய்தியாளர் மாநாட்டிற்கு முன்னதாகக் கூடி ஆராய்ந்தனர்.

இதுகுறித்து சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில் -

முகமாலையிலுள்ள சோதனைச் சாவடியை அகற்றி பொது மக்கள் வாக்களிப்பதற்கு வசதிசெய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதை எத்தனையோ முறை வலியுறுத்திக் கூறிய போதிலும் இதுதொடர்பாக இன்னமும் சாதகமான முடிவெதுவும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளரிடம் எத்தனையோ முறை வலியுறுத்திக் கூறியபோதிலும் இது தொடர்பாக இன்னமும் சாதகமான பதில் எதுவும் எடுக் கப்படவில்லை.

வடக்கு - கிழக்குப் தமிழர் தாயகமாகவே காணப்படுகிறது. இதனை யாராலும் பிரித்துவிடமுடியாது.

தமிழர்களின் பிரச்சினைக்குரிய தீர்வுகள் யாவும் வடக்கு - கிழக்கு தாயகம் என்ற அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும்.

தமிழ்மக்கள் மத்தியிலும் இத்தகைய நிலைப்பாடே காணப்படுகிறது. இந்த நிலைப்பாட்டை எவராலும் ஒன்றும் செய்துவிட முடியாது. பிரதேசவாதம் என்பது என்றைக்கும் தமிழ்மக்களிடையே காணப்படவில்லை.

தாம் யாருக்காகப் போராடினார்களோ அந்தக் கொள்கைகளை மறந்து அதற்கு மாறாகச் சிலர் செயற்படுகின்றனர். இத்தகையவர்கள் விடுதலைக்கு உயிர்கொடுத்தவர்களின் நியாயங்களை கொச்சைப்படுத்தியவர்களாகவே மக்களால் கருதப்படுவார்கள்.

இனவாத சக்திகளே பிரதேசவாதத்தைத் தூண்டுகிறார்கள். தமிழ்மக்கள் இதனை உணர்ந்து செயற்படவேண்டிய காலகட்டத்தில் உள்ளனர்.

இத்தகைய இனவாதசக்திகளின் நடவடிக்கைகளுக்கு விடு தலைப் புலிகள் என்றும் இடமளிக்க மாட்டார்கள் என்றே கருதுகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டம்!

போதைப் பொருட்கள், புகைத்தல் பாவனையிலிருந்து விடுபட்டு, நல்லொழுக்கத்துடன் மக்கள் வாழவேண்டுமென்பதற்காக வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சித்தன்கேணி மகா கணபதி ஆலய வீதியில் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை நடைபெறவுள்ள இந்த உண்ணாவிரதத்தை, வலி.மேற்குப் பிரதேச செயலாளர் சி.ஏ.மோகன்தாஸ் ஆரம்பித்துவைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாகச் சங்கானை அரசியற் பிரிவைச் சேர்ந்த அன்புவும், கூட்டமைப்பு வேட்பாளர் எஸ்.சிவமகாராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் உண்ணாவிரதத்தை நிறைவுசெய்து வைப்பார். (101)

# வீதி ஒழுங்கை மீறி கட்டடம் அமைப்போர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது!

## நல்லூர் பிரதேசசபை செயலாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியோரங்களில் கட்டடங்களை அமைக்கும்போது, வீதி ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறுவோர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நல்லூர்ப் பிரதேசசபையின் செயலாளர் இ.இராசதுரை தெரிவித்தார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது -

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 'சி' தரத்து, 'டி' தரத்து வீதிகள் யாவும் 33 அடி அகலமுடையதாக்கப்படவுள்ளன.

இனிவரும் காலத்தில் வீதி ஓரங்களில் வீடுகள், மதில்கள், கடைகள் முதலானவற்றைக் கட்டுவோர் - இந்த அளவைக் கருத்திற்கொண்டு, அவற்றை அமைத்தல் வேண்டும்.

அவற்றை விடுத்து, விதிமுறைகளுக்குப் புறம்பான முறையில் கட்டடங்களை அமைப்போர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பருத்தித்துறை வீதியின் பரமேஸ்வராச் சந்திப் பகுதியிலும், திருநெல்வேலிப் பகுதியிலும் அமைக்கப்பட்ட இரு வீதி ஒழுங்கு மீறிய கட்டடங்களுக்கெதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டதன் மூலம், அவர்கள் தற்போது தமது கட்டடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சில கடைகளின் முன்பாக தகரக்கொட்டில்கள் போடப்படுகின்றன. இவையும் வீதி ஒழுங்கை மீறும் செயல்களாகும். இவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதுவரை யாழ். நீதிமன்றில் 16 இற்கும் மேற்பட்ட வீதி ஒழுங்குகளினைப் பாதிக்கும் வகையில் நிறுவப்பட்ட கட்டட உரிமையாளர்கள் மீது யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது.

இதுவரை 'சி'தரத்து வீதிகள் மற்றும் 'டி' தரத்து வீதிகளின் அகலம் 25 அடியாகவே இருந்து வந்தது. தற்போது அது 33 அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு, நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மக்கள் தமது கட்டடங்களை அமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.(ப)

## எழுதுகருவிகளுக்கான கொடுப்பனவை பணமாக வழங்கவேண்டுமெனக் கோரிக்கை

### கிராம அலுவலர்கள் முன்வைப்பு

(வண்ணை)

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த கிராம சேவையாளர்கள் தமக்குரிய எழுதுபொருள் கொடுப்பனவை கடந்த காலங்களைப்போல் பணமாக வழங்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.


இவர்களுக்கான கொடுப்பனவு நிறுத்தப்பட்டு எழுதுபொருள் வழங்கப்படுவதால், போட்டோ பிரதி செய்தல் போன்ற இதர செலவுகளை தம்மால் ஈடுசெய்யமுடியாதுள்ளது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவர்களுக்கு மாதாந்தம் எழுநூற்று ஐம்பது ரூபா எழுதுபொருள் கொடுப்பனவாக வழங்கப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

தெற்குத் திசையினிலே... - கொழும்பிலிருந்து இந்திரஜித் -

# அதிகரிக்கும் தேர்தல் வன்முறைகளும் கட்சிகளிடையேயான குற்றச்சாட்டுகளும்









தேர்தல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. இதில் எந்தக் கட்சி அதிகமான வன்முறைகளில் ஈடுபட்டது, எது ஈடுபடவில்லை என்றெல்லாம் பார்ப்பதை காட்டிலும், மொத்தத்தில் எல்லாக் கட்சிகளுமே ஜனநாயக நடைமுறைகளை மீறி தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டே வருகின்றன. தாம் அடுத்தவர்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என்ற தோரணையில் ஒவ்வொரு கட்சியும் வன்முறைகளில் ஈடுபட்டுவருகின்றன. மறு

> **தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்போதைய விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வெளிப் படுத்தும் கொள்கை தமிழ் மக்கள் மத்தியிலும், போரை விரும்பாத மக்கள் மத்தியிலும், அந்த கட்சியின் செல்வாக்கை உயர்த்தியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் மத்தியில் ஏற்பட் டிருக்கும் உள்வீட்டு பிரச்சினையை அவர்களே அதனை தீர்த்துக்கொள்வர்.**

புறத்தில் இந்த வன்முறைகளை கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவருவதற்காக, சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு அல்லது அதன் கீழ் இயங்கிவரும் பொலிஸ்துறை என்பன என்ன நடவடிக்கைகள் எடுத்தன என்பதே தற்சமயம் எழுந்துள்ள கேள்வியாகும். சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு என்பது ஏற்கனவே, பொதுஜன ஐக்கிய முன்னணியும் பின்னர்வந்த ஐக்கிய தேசிய முன்னணியும், பொலிஸ் சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்படவேண்டும் என் பதில் தீவிரமாகக் கருத்துக்களை வெளியிட்டு வந்தன. அதன்படி பொலிஸ் சுயாதீன ஆணைக்குழுவும் நிறுவப்பட்டது. ஆனால் அந்த சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவின் சுயாதீன தன்மை எந்தளவு காக்கப்படுகின்றது என்பது தற்சமயம் கேள்வியாக தொக்கி நிற்கிறது. இன்னமும் பொலிஸ் ஆணைக் குழுவின் செயற்பாடுகளை அரசியல்வாதி களும், அவர்களுக்கு ஆதரவாளர்களும் தீர் மானிக்கும் நிலையே காணப்படுகிறது. பொலி ஸார் சுயாதீனமாக செயற்படத்தொடங்கி னால், அது ஜனநாயத்திலிருந்து விலகி நிற் கும் அரசியல்வாதிகளுக்கு மிகவும் நெருக் கடிகளை கொடுத்துவரும் எனவேதான் தொடர்ந்தும் பொலிஸ்துறையை தமது பொறுப்பில் வைத்துக்கொள்ள அரசியல்வாதி கள் விரும்புகின்றனர். ஐக்கிய தேசிய முன்ன ணியாக இருந்தால் என்ன? அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக இருந்தால் என்ன? இரண்டுக்கும் எவ்வித வித்தியாசங்க ளையும் காணமுடியவில்லை. ஒரே குப்பை யில் - ஊறிய மட்டைகள் என்ற பதம் இரண்டு கட்சிகளுக்கும் பொருத்தமானதே. ஐக்கிய தேசிய கட்சியினர் பொலிஸாரைக் கொண்டு நடத்திவந்த வன்முறைகளை கடந்த காலத் தில் நாம் கேள்விப்பட்டோம். அதேபோல, பொதுஜன ஐக்கிய முன்னணியும் பொலிஸா ரின் பக்கபலத்தைக்கொண்டு செயற்பட்ட விதங்களை மீட்டிப்பார்த்தால், இரண்டுக்கும் எவ்வித வித்தியாசங்களும் இல்லை. பொலிஸ் வன்முறைகளை தூண்டினாலும் அல்லது அதற்கு உடந்தையாக இருந்தாலும் அது, நாட்டின் நீதித்துறையை முழுமையாகவே பறித்துவிடும். பொலிஸாருக்கு இன்று பொது மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை பார்த்தால், அது பெரும்பாலும் இல்லை என்றே கூறவேண்டும். பொதுவாக பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில், நல்லுறவு நிலவவேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இதனை அந்த இலக்கு இலங்கை யில் அரைவாசி தூரம்கூட எய்தப்படவில்லை. மாறிமாறி பதவிக்குவரும் இரண்டு கட்சிகளும் எப்போதும் இந்த கொள்கையை முன்னெடுக் கப்போவதாக கூறியே வருகின்றன. எனினும் இடைநடுவில் அந்த கொள்கை முன்னெ டுப்போ, அல்லது முனைப்புக்கான சிறிய ஒரு நகர்வோ இடம்பெறவதில்லை மக்களின் காவ லர்களாக பொலிஸார் செயற்படவேண்டும். ஆனால், இலங்கையில் கடந்த 23 வருடகால மாகப் பொலிஸார் யுத்த வீரர்களாகவே மக் களால் கருதப்பட்டுவந்தனர். இதனால் அவர் கள், மக்களிலிருந்து விலகியவர்களாக கரு தப்பட்டுவந்தனர். அதேவேளை, பொலிஸா ருக்கு தாம் மக்களின் காவல்கள், ஜனநா யகத்தின் காவல்கள் என்ற எண்ணம் மாறி சட்டம் தமது கையில் என்ற அடிப்படையில் செயற்பட்டுவர தலைப்பட்டனர்.

இந்த நிலையிலேயே பொலிஸ் சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்பட்டு, அதன் பணி களும் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அண் மைக் காலத்தில் அதனை மீறி செலுத்தப் படும் செல்வாக்கு பாரதூரமாக மாறியுள்ளது. பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிப்பதில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசிய கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அரசியலமைப்பு சபைக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற நிகழ்வுகள் யாவரும் அறிந்த விடயம், அதேவேளை, ஜனாதிபதி உள்துறை அமைச்சைப் பொறுப்பேற்றதன் பின்னர், அதன் பணிகளில் ஏற்பட்டுள்ள மாற் றங்களும் இங்கு நோக்கத்தக்கது. இவையா வற்றுக்கும் மத்தியில் தற்சமயம் பொதுத் தேர்தல் ஒன்று இடம்பெறும் வேளையில், இந்த பொலிஸ்துறையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் சுயாதீன பொலிஸ் ஆணைக் குழுவின் எதிர்காலத்தையே சூனியமாக்கி விடும் எனக் கருதப்படுகிறது. இதற்கிடையில் ஜனாதிபதியின் சகோதரர் அனுராபண்டார நாயக்க, தாம் ஆட்சிக்கு வந்தால் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவையே கலைத்து விடுவோம் என கூறிவருவது இன்னும் யோசிக்க வைக்கும் விடயமாக மாறியுள்ளது.

பொலிஸ், தேர்தல், அரசசேவை மற்றும் நீதிச் சேவைகள் ஆணைக்குழுக்கள் நியமிக் கப்பட வேண்டும் என முன்பிருந்தே இரண்டு பிரதான கட்சிகளாலும் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுவந்தன. அதன் அடிப்படையி லேயே பொலிஸ் சுயதீன ஆணைக்குழுவும் அமைக்கப்பட்டது. எனின் தற்சமயம் அனுரா பண்டாரநாயக்க அதனை கலைத்து விடு வோம் எனக் கூறுவது பாரதூரமான விடயமா கும். அதேபோல, தேர்தல் திகதி அறிவிக்கப் பட்டபின்னர் பொலிஸ் இடமாற்றங்கள் இடம் பெறக்கூடாது என்பது சட்டமாக இருந்த போதும், அம்பாறையில் காவல் நிலையப் பொறுப்பாளர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாரை கட்டுப்படுத்தும் உள்துறை அமைச்சின் பொறுப்பை ஜனாதிபதி கொண் டிருக்கையில் அவரைமீறி இந்த இடமாற்றம் இடம்பெறவாய்ப்பில்லை. எனவே, நாட்டில் ஜனநாயத்துக்கான தேர்தல் நடைபெறுவதாக அவர் கூறுவது எவ்விதத்தில் பொருந்தப் போகிறது. நீதிச்சேவையிலும் இவ்வாறே தலையீடுகள் இருந்துவருவதை எம்மால் இங்கு சுட்டிக்காட்டமுடியும். பணத்தை கொண்டு நீதிபதிகளை விலைக்கு வாங்கிய நிகழ்வு ஒன்றை எம்மால் அண்மையில் சந்திக்க முடிந் தது. அந்த நிகழ்வு உண்மையில், இலங்கை யின் நீதித்துறையை எவ்வாறு சாதாரணப் பொதுமகன் நம்பமுடியும். என்ற நிலையை ஏற்படுத்திவிட்டது. அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல அரசியல்வாதிகளின் செல்வாக்கை பெற்றோரும் இவ்வாறான செயல்களில் ஈடு படலாம் என்பதற்கு, இது ஒரு எடுத்துக்காட்டா கும். காவல்துறையும், நீதித்துறையும் நம்பி இந்த தேர்தல் பிரசாரங்களை நடத்தும் அளவிற்கு அந்த துறைகள் அரசியல்வாதி களால் பாதிக்கப்பட்டுவிட்டன. அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இந்த தேர்தலுக்குள் சிறைக்கு அனுப்பப்போவதாக அனுராபண் டாரநாயக்க சவால் விட்டுள்ளநிலையில் ஜனாதிபதியும் எஸ்.பி.திஸாநாயக்கவை வழக்கு ஒன்றில் சந்திப்பதற்காக, நிறைவேற்று அதிகாரத்தைக்கூட கைவிடத்தயார் எனக் கூறியுள்ளார். பொலிஸ், நிர்வாக, நீதி என் பவற்றின் விதி இவ்வாறு இருக்கும் நிலையில் தற்போதைய தேர்தல், அரசியல் நகர்வில் அடுத்த கட்டம் என்ன என்பதை கவனிப்போம். அரசாங்கமும், ஜனாதிபதியும் மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுகளை சுமத்திவருகின்றனர். ஜனாதிபதி தமது நிறை வேற்று அதிகாரத்தை பிழையான வழியில் செயற்படுத்திவருகிறார், என ஐக்கிய தேசிய கட்சி கூறும் அதேநேரம், ஜனாதிபதி ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியின்போது, நிகழ்வ தாக கூறப்படும் ஊழல்களை, குற்றங்களாக மாற்றிவருகிறார். இதில் இறுதியாக அவரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, சமுர்த்தி நிதியில் இருந்து 2000 மில்லியன் ரூபாவை கையாடிய தாக சுமத்திய குற்றச்சாட்டும் இதன்போது, ஜனாதிபதி தமது தரப்பில் வலுவான கட்சி இருப்பதால், தாம் நிறைவேற்று அதிகாரத்தைக் கூட கைவிட்டு வரத்தயார், எனவும் கூறியுள் ளார். இலங்கையின் 1977 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டப்படி நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியின் மீது வழக் குத் தொடரமுடியாது, என்பதை கருத்திற் கொண்டே ஜனாதிபதி இந்த சவாலை அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு விடுத் துள்ளார். ஜனாதிபதி இந்தச் சவாலை எந்த நோக்கத்திற்கு விடுத்துள்ளார். என்பதை நோக்கும்போது, முழுமையாக தேர்தல் வெற் றியை மையமாகக் கொண்ட நடவடிக்கையே அதுவாகும். அதேநேரம் ஐக்கிய தேசிய கட்சி யும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது. ஜனாதிபதியினால், தமக்குத் தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்பட்டு வருவதால், நிறைவேற்று அதிகாரத்தை கைவிட்டு, ஜனாதிபதி வருவதாகக் கூறும் வழக்கு ஒன்றுக்கு, அவரை கொண்டுசெல்லும் நடவடிக்கையை தற்போதே அது ஆரம்பித்து விட்டது. ஜனாதிபதி தம்மீது எஸ்.பி. திஸா நாயக்கவை மட்டுமே, வழக்குத் தாக்கல் செய்யக் கூறியிருந்தும், ஆனால், தற்சமயம் அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் அவ்வா றான ஒரு சவாலை தாம் ஏற்றுக்கொண்டிருப் பதாகக் கூறப்படுகிறது. ஜனாதிபதி ஒருநாள் மேடையில் இந்தச் சவாலை விடுத்த பின்னர் இதுவரை வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனை மீண்டும் நினைவுபடுத்துவதில்லை. எனவே அவர் தொடர்ந்தும் அதே கொள்கை யில் இருக்கிறாரா? என்பது தெளிவாகவில்லை. இது ஒரு தேர்தல் பரப்புரையாக இருந்தா லும், எதிர்காலத்தில் ஜனாதிபதியும், ஐக்கிய தேசிய முன்னணியும், தொடர்ந்தும் அரசியல் எதிரிகளாக இருக்கும் நிலைப்பாட்டுக்கு கொண்டுசெல்கிறது என்பது உண்மை.

இந்த நிலையில் அமைச்சர் எஸ்.பி. திஸா நாயக்கவை மற்றும் ஒரு வழியிலும் நீதிமன் றத்திற்கு அழைக்கும் செயற்பாட்டை ஜனாதி பதியின் கட்சி மேற்கொண்டுவருகிறது. காலி ஹபராதுவ பகுதியில் அவர் கடந்த நவம்பர் 3 ஆம் திகதி நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் உரையாற்றினார் என்ற, குற்றச் சாட்டு தற்சமயம் உயர்நீதிமன்ற விசார ணைக்கு வந்துள்ளது. இந்த குற்றத்துக்கு தொடர்பான உயர்நீதிமன்றத்தின் 9 நீதியரசர் களில் 6 நீதியரசர்களின் கருத்துக்களை தலைமை நீதியரசர் பெற்றுள்ளார். அமைச்சர் உரைநிகழ்த்திய கூட்டத்தின் ஒலி, ஒளித்தி ரையை பார்த்தே, தமது கருத்துக்களை நீதி யரசர்கள் சமர்ப்பித்துள்ளனர். இவர்களின் கருத்துக்களின்படி எஸ்.பி.திஸாநாயக்கவின் உரை, நீதிமன்றத்தை அவமதிப்பதாகவே அமைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேலும் மூன்று நீதியரசர்கள் தமது கருத்துக்களை வெளியிடவுள்ள நிலையில், தலைமை நீதி யரசருக்கு இந்த வழக்குத் தொடர்பில் அமைச் சரை நீதிமன்றத்திற்கு அழைக்கும் ஆணையை விரைவில் விடுப்பார் என எதிர்பார்க்கப்படு கிறது. இதன்படி அமைச்சர் தமது உரை நீதிமன்றத்தை அவமதிக்கவில்லை என்பதற் கான விளக்கத்தை அளிக்கவேண்டியநிலை ஏற்படும். இது தேர்தலுக்கு முன்னர் நடக்கு மானால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியும் ஒரு சவாலை நிறைவேற்றிய திருப்தி ஏற்படும். ஆனால், அது அந்த முன்னணியின் தேர்தல் வெற்றிக்கு உதவப்போவதில்லை. மறுபுறத்தில் இந்தச் செயற்பாடு அமைச்சரின் தேர்தல் வாக்குகளின் எண்ணிக்கையை உயர்த்த உதவும். ஆனால், 2000 மில்லியன் ரூபா தொடர்பான வழக்கு தேர்தலுக்கு முன் வருமானால் அது மாற்றுச் செயற்பாட்டை ஏற்படுத்தும். இது இவ்வாறிருக்க கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதி கருணாவின் செயற்பாடு தென்னி லங்கை தேர்தல் களத்தில் மாற்றங்களைக் கொண்டுவந்து விடுமோ? என எதிர்பார்க்கப் பட்டபோதிலும், இன்னும் அதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை என்ற நிலை காணப்படுகிறது. கருணாவின் செயற்பாட்டால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆசனங்கள் நாடாளுமன்றத் தில் குறைந்துவிட்டால், அது ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பாதகமாக அமைந்துவிடும். மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு அது வாய்ப் பாக வந்துவிடும் நிலை நிலவுகிறது. ஆனால், இதுவரை அந்தநிலை வராதபோதும், அதற் கான முன்னெடுப்புக்களின் ஒரு கட்டமாகவே கிழக்கின் பிரச்சினையை பூதாகரமாக வெளிப் படுத்தி நிலைமையைத் தமக்கு சாதகமாக பயன்படுத்தும் பிரசாரங்களை அரச ஊடகங் கள் செய்துவருகின்றன. ஆனால், திருகோண மலை தளபதி பதுமன் படுகொலை செய்யப் பட்டார், என அந்த ஊடகங்கள் செய்தியை வெளியிட்டதன் பின்னர் அவற்றின்மீது மக்கள் தற்சமயம் முழு நம்பிக்கையையும் இழந்து விட்டனர். இது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பொறுத்தவரையில் பிழையான பிரசாரத்தில் கிடைத்த பின்னடைவாகும். அதேநேரம் இந்தச் செய்தியின் உண்மை யற்ற தன்மை காரணமாக தனியார் ஊடகங் களின் பங்கினை மக்கள் தமது கவனத்தை முன் இருந்ததைவிடச் அதிகமாகவே திருப்பி யுள்ளனர். இது ஜனாதிபதியின் கட்சிக்கு பாதாகமான நிலையாகும்.

மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிக ளின் தற்போதைய விடயத்தில் ஐக்கிய தேசி யக் கட்சி வெளிப்படுத்தும் கொள்கை தமிழ் மக்கள் மத்தியிலும், போரை விரும்பாத மக் கள் மத்தியிலும், அந்த கட்சியின் செல் வாக்கை உயர்த்தியுள்ளது. தமிழீழ விடு தலைப்புலிகள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் உள் வீட்டு பிரச்சினையை அவர்களே அதனை தீர்த் துக்கொள்வர். தயவுசெய்து தென்னிலங்கை அரசியல் கட்சிகள் இதனைக்கொண்டு அரசியல் லாபம் தேடக்கூடாது, என்று அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் வேண்டுகோள் நிச்சயம் தற்போ தைய அரசியலில் காத்திரமான செல்வாக்கை ஐக்கிய தேசிய கட்சிக்கு அளித்துள்ளது.

# ஆளுமையுள்ள பெண்களால்தான் சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படுகின்றன

## மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழினி





(யாழ்ப்பாணம்)

ஆளுமையுள்ள பெண் தனது குடும் பத்தில் மாத்திரமின்றி சமூகத்திலும் மாற் றங்களை ஏற்படுத்துபவளாக இருக்கின் றாள். ஒரு சமூகத்தில் மாற்றத்தை ஏற் படுத்தவேண்டுமாயின், அந்தமாற்றம் முதன் முதலாக பெண்களில் இருந்தே ஆரம் பிக்கப்படவேண்டும், என தமிழீழ விடு தலைப்புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

நேற்று நல்லூர் கோவில் வீதியில் பெண்கள் பண்பாட்டு மையச் சங்கத்தின் இணைப்பாளர் கிருஸ்ணவேணி தலைமையில் இடம்பெற்ற பெண்கள் பண்பாட்டு மையச்சங்க திறப்பு விழாவினைத் தொடர்ந்து இடம்பெற்ற பெண்வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இக்கருத்தினை அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து மகளிர் அரசியற்பொறுப்பாளர் தமிழினி உரையாற்றுகையில் நமது சமுதாயத்திலே பெண்கள் எழுதப்படாத சட்டங்களின் அடிப்படையிலே வளர்க்கப்படுகின்றார்கள். இதனால் பெண்ணானவள் தன்னெழுச்சியை உணர்வில் இருந்து எழும் எண்ண்ங்களை, சுதந்திரமாக வெளிப்படுத்த அச்சம் கொள்கிறாள். நமது சமுதாயத்திலே பெண்கள் வளர்க்கப்படுவதில்லை. வார்த்தெடுக்கப்படுகின்றார்கள். ஆணாதிக்கம் என்பது ஆண்களிடம் மட்டுமில்லை. இச்சிந்தனை பெண்களிடமும் அதிகம் இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய கூட்டமைப்பின் பெண் வேட்பாளரான பத்மினி சிதம்பரநாதன், எமது இலக்குகளை அடைவதற்கு எவ்வாறு பயன்படுத்துகின்றோமோ அதுவே பண்பாடு ஆகும். பண்பாடானது காலத்தின் தேவைக்கு ஏற்ப பண்படுத்தப்படவேண்டும் எனக் குறிப் பிட்டார்.

# கெயிட்டியின் முன்னாள் ஜனாதிபதி அரிஷ்டைட் ஜமேக்கா செல்ல அந்நாட்டு அரசு அனுமதித்தது



ஹெயிட்டியின் முன்னாள் ஜனாதிபதி அரிஸ்டைட் ஜமேக்காவிற்கு விஜயம் ஒன்றினை மேற்கொள்வதற்கு அந்த நாட்டின் பிரதமர் அனுமதி வழங்கியுள்ளார்.

இவ்விஜயத்தை ஹெயிட்டியின் பிரதமர் 'லட்ரோடு' கண்டித்துள்ளார். இது தொடர்பாக கெயிட்டியின் பிரதமர் தெரிவித்த ஆட்சேபத்தில் முன்னாள் ஜனாதிபதி அரிஸ்டைட்டின் ஜமேக்காவிற்கான விஜயம் ஹெயிட்டியில் குழப்பங்களை மேலும் அதிகரிக்கும் என ஜமேக்காவிற்குத் தெரிவித்துள்ளதாக ஹெயிட்டி பிரதமர் தெரிவித்துள்ளார். ஆனால் இவ்விஜயம் தற்காலிகமானதும், குடும்பகாரணங்கள் கொண்டவையுமாக அமைந்துள்ளதென அமெரிக்க இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் இவ்வார இறுதியில் ஹெயிட்டி பிரதமர் 'லட்ரோடு' ஜமேக்காவிற்கு தனிப்பட் விஜயம் ஒன்றை மேற்கொண்டு முன்னாள் ஹெயிட்டி ஜனாதிபதியின் பிரயாணம் தொடர்பாக உரையாடுவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

கெயிட்டியில் இருந்து 93 மைல்கள் தூரத்தில் முன்னாள் ஜனாதிபதி தங்கியி ருப்பது கெயிட்டியில் மேலும் குழப்பங்களை அதிகரிப்பதற்கு வழி செய்யலாம் என கெயிட்டியின் பிரதமர் சிந்திப்பதாக பி.பி.சியின் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் ஜனாதிபதி "அரிஸ்டைட்" ஜமேக்காவிற்கு விஜயம் மேற்கொள்ளும் போது அந்த நாட்டைத் தனது பிரசாரங்களிற்குத் தளமாகப் பாவிக்கக் கூடாதென ஜமேக்கா அரசு முன்னாள் ஜனாதிபதிக்குத் தெரிவித்ததாக பி.பி.சி செய்தியாளர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே வியாழக்கிழமை கெயிட்டியின் தலைநகரில் வன்முறைகள் மீண்டும் அதிகரித்துள்ளன. ஜனாதிபதி அரிஸ்டைட்டின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கு கண்ணீர்ப்புகைக் குண்டுகளை பொலிஸார் பாவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1000 இற்கும் மேற்பட்ட. ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையின்முன் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்காவிற்கெதிரான சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் நின்றனர். அத்துடன் புதிய பிரதமர் 'லட்ரோடு' வைத் தாம் ஆதரிக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

## பொது இடங்களில் புகைப்பிடிக்க உகண்டாவில் தடை!

பொது இடங்களில் புகைப்பிடிப்பதைத் தடைசெய்துள்ளதாக உகண்டாவின் சூழல் பாதுகாப்பு அமைச்சர் 'ககின்டா' தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பாடசாலைகள், உணவு விடுதிகள், மதுபான நிலையங்கள் ஆகியவற்றில் புகைத்தல் முக்கியமாகத் தடுக்கப்பட்டுள்ளது. இவற்றை மீறுபவர்கள் 10 தொடக்கம் 50 டொலர்கள் வரையான அபராதம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே -

சூழல் பாதுகாப்பு அமைப்பொன்றின் பணியாளர் 'பிலிப் கருகபா' கருத்துத் தெரிவிக்கும் போது 2002 இல் நீதிமன்றத்தினால் உருவாக்கப்பட்டிருந்த சட்டம் ஒன்றினையே செயல் படுத்துவதாக தெரிவித்தார்.

உகண்டாவின் வடமேற்குப்பகுதியில் புகையிலைச்செடிகள் பயிரிடும் விவசாயிகளிடையே இந்தப் புகைத்தல் தடை பிரச்சினை களை உருவாக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொஸ்னிய சேர்பிய முன்னாள் தலைவரை கண்டுபிடிக்க நடவடிக்கை

போர்க்காலத்துக் குற்றவாளி என தெரிவிக்கப்பட்ட பொஸ்னியாவின் முன்னாள் சேர்பிய தலைவர் ரடோவன் கரடிக்கை தேடிக் கண்டு பிடிப்பதில் பொஷ்னிய சேர்பிய பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

நாட்டின் கிழக்குப் பகுதியில் வாழ்வதாக கிடைத்த தகவலின் பின்னர் அப்பிரதேசத்தில் தேடுதல்களை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டுகளில் பொஷ்னியாவில் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் மனிதப் படுகொலைகள் தொடர்பாக போர்க்காலத்து குற்றவாளிகள் தொடர்பான நீதிமன்றத்தினால் ரடோவன் குற்றம் சுமத்தப் பட்டிருந்தார்.

## தென்கொரிய ஜனாதிபதியை பதவிநீக்க சட்ட நீதிமன்றத்தின் முடிவு எதிர்பார்ப்பு!

தென் கொரிய ஜனாதிபதி ரோ மூ கயூனை பதவியிலிருந்து நீக்குவதற்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் எதிர்க்கட்சியினர் பெரும்பான்மையான வாக்கெடுப்புகள் மூலம் வெற்றிபெற்றிருந்தனர்.

தற்போது அரசியல் சட்ட நீதிமன்றத்தின் முடிவினை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இந்த முடிவினை விரைவாகத் தெரிவிக்குமாறு புதிய இடைக்கால ஜனாதிபதி கோகுன் நீதிமன்றத்தினை கேட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ரோ மூ கயூனின் ஆதரவாளர்கள் பாராளுமன்றத்துக்கு வெளியே, ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர். நேற்றும் மேலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. தற்போது மேற்கொண்டுள்ள கருத்துக் கணிப்பில் எழுபது வீதமான மக்கள் சட்ட சபையின் முடிவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்கு மறுப்புத் மறுத்துள்ளனர்.

தென்கொரிய மக்களுக்கு எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட முடிவு அதிர்ச்சியினைக் கொடுத்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி ரோ தனது ஐந்து வருட ஆட்சிக் காலத்தில் ஒரு வருடம் மாத்திரமே கடமையாற்றியுள்ளார்.

மேலும் வேட்பாளர் சட்டத்தில் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட சிறிய குற்றத்திற்காக அவரை பதவியிலிருந்து நீக்க முற்பட்டுள்ளமை சதிப் புரட்சியென ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.



இதனிடையே தொலைக்காட்சி செய்தியில் மக்கள் அரசியல் சட்ட நீதிமன்றத்தின் முடிவு தெரிவிக்கப்படும் வரை அமைதியைப் பேணுமாறு ஜனாதிபதி ரூ மூ கையும் கேட்டுள்ளார்.

## திக்றிற்றில் நடந்த தாக்குதலில் இரு அமெரிக்கப் படையினர் பலி!



ஈராக்கில், திக்றிற்றில், நடைபெற்ற தெருவோர குண்டுத்தாக்குதலில் 2 அமெரிக்கபோர் வீரர்கள் கொல்லப்பட்டும் மூவர் காயமடைந்துமுள்ளனர். சதாம் ஹூசைனின் நகரான திக்றிற்றில் படையினர் மாற்றிய பின் அமெரிக்க படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலில் துப்பாக்கிதாரி மூன்று கவசரோந்து வாகனங்களில் இறுதியாக சென்ற வாகனத்தின் மீதே துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டிருந்தார். இதேவேளை இரண்டாவதாக சென்றுகொண்டிருந்த வாகனம் குண்டு வெடிப்பில் சிக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதல் நடைபெற்ற பின்னர் 50 ற்கும் மேற்பட்ட போர் வீரர்கள் சம்பவம் நடைபெற்ற இடத்தின் அருகில் அமைந்த பிரதேசங்களில் தேடுதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே ஈராக்கிய பாதுகாப்பு படையினரின் மத்தியில் இஸ்லாமிய தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது. இரு அமெரிக்கப் போர் வீரர்கள் அண்மையில் கொல்லப்பட்ட சம்பவத்தில் ஈராக்கிய பொலிசார் சம்பந்தப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அல்கொய்டா உறுப்பினர்களைத் தேடி அமெரிக்கப் படையினர் நடவடிக்கை!



அல்கொய்டா அமைப்பின் அங்கத்தவர்களையும், தலிபான் போராளிகளையும் கைது செய்வதற்குப் புதிய போர் நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்க கூட்டுப்படை தெரிவித்துள்ளது. ஆப்கானிஷ்தானின் மலைப்பிரதேசங்களில் நடத்தப்படவுள்ள நடவடிக்கைகளின் மூலம் அந்த அமைப்புக்களின் தலைவர்களை கைது செய்வதற்கு திட்டமிட்டடுள்ளதாக அமெரிக்க இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார். சென்ற ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த இந்த போர் நடவடிக்கைகளின் மூலம் அல்கொய்டா, தலிபான் குழுக்களின் உயர்மட்ட தலைவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவுள்ளனர்.

சென்ற ஜன்வரி மாதம் கூட்டுப்படையின் அதிகாரி ஓஸாமா பின்லாடன் ஒரு ஆண்டிற்குள் கைதுசெய்யப்பட்டு விடுவாரென தெரிவித்தார். தற்போதைய மலைப்பிரதேசத்தில் நடத்தப்படும் போர் நடவடிக்கைகளின் மூலம் போராளிக் குழுக்களின் உள்கட்டமைப்பில் அதிக அழுத்தை கொடுப்பதே நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் பெரு ஜனாதிபதி புஜிமோரிக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கவேண்டும்

## அந்நாட்டு சட்டவல்லுநர்கள் கோரிக்கை

முன்னாள் பெருவின் ஜனாதிபதி புஜிமோரிக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்படவேண்டுமென சட்டவல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி 'புஜிமோரி' 2000 ஆம் ஆண்டில் நாட்டிலிருந்து வெளியேறி ஜப்பானில் அரசியல் தஞ்சம் கோரியிருந்தார். இவரது பெற்றோர்கள் ஜப்பானில் பிறந்திருந்ததால் ஜப்பானிய குடியுரிமை வழங்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி புஜிமோரி 1991, முதல் 1992 காலப் பகுதியில் 25 பொதுமக்களை கொல்வதற்கான கட்டளையை 'லா கொலினா' எனப்படும் குழு ஒன்றின் மூலம் மேற்கொண்டிருந்தார்.

தற்போது கொலை, ஆட்கடத்தல், பலரை காயப்படுத்தியது தொடர்பான குற்றங்களுக்காக விசாரணைகளை மேற்கொள்ளவிருந்தார். இதனால் ஜப்பானிய அரசிடம் ஜனாதிபதி அல்பேற்ரோ புஜிமோரியை ஒப்படைக்குமாறு கேட்டிருந்தது.

ஆனால், ஜப்பானிய குடியுரிமை பெற்றுள்ள ஒருவரை நாடு கடத்தும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படாத ஒரு நாட்டிடம் ஒப்படைக்க முடியாதென ஜப்பான் தெரிவித்துள்ளது.



ஜனாதிபதி 'அல்பேற்ரோ' 1990 ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆம் ஆண்டுவரை ஆட்சியில் இருந்த போதே இக்கொலைகளுக்கு கட்டளை பிறப்பித்திருந்தார். இக்கொலைகளைத் தான் மேற்கொள்ளவில்லை என மறுப்புத் தெரிவித்த ஜனாதிபதி 2006 ஆம் ஆண்டில் பெருவில் ஜனாதிபதித் தேர்தலுக்கு போட்டியிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## ஸ்பெயின் குண்டுத் தாக்குதலில் பலியான 40 மக்களின் இறுதிச் சடங்கு நேற்று நடந்தது

ஸ்பெயின் ரயில் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட 200 பொதுமக்களின் 40 பேரினது மரணச்சடங்கு நேற்று நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் இந்தத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 8 மில்லியன் மக்கள் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இவ் எதிர்ப்பு ஊர்வலத்தில் ஸ்பெயினின் அரச குடும்பத்தினர் பிரதம மந்திரி, ஐரோப்பியத் தலைவர்கள் கலந்துகொண்டு இரங்கல் உரையாற்றினர். இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு ஏரா எனப்படும் அமைப்பு காரணமென தெரிவிக்கப்பட்ட போதும், அந்த அமைப்பு இக்குண்டு வெடிப்பிற்கும் தமக்கும் சம்பந்தமில்லை என மறுப்பு தெரிவித்துள்ளது.




இதேவேளை அல்கொய்டா அமைப்பும் இக் குண்டுத்தாக்குதலில் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.

### ஆந்திர மாநிலத்தில்

## ஒரே குடும்பத்தில் 150 போலி வாக்குகள்

வக்காளர் பட்டியலில் போலி இடம்பெறுவது ஒன்றும் புதிதல்ல. ஆனால் ஆந்திர மாநிலத்தில் ஒரே வீட்டில் 150 போலி வாக்காளர்கள் இடம்பெற்றுள்ள அதிசய சம்பவம் நிகழ்ந்துள்ளது. விசாகப்பட்டினம் சட்டசபை தொகுதியில் உள்ள வைசாக் நகரில் 2 போலியாக சேர்க் கப்பட்டுள்ளனர். கடந்த 4 ஆண்டுகளாக இந்தப் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இருந்த போதிலும் தேர்தலையொட்டி வாக்காளர் பட்டியலை அதிகாரிகள் சரிபார்த்த போது இந்த விவரம் வெளியாகி உள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஓட்டமாவடியில் நேற்று வன்முறை பொலிஸார் சூட்டு இருவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடியில் நேற்று மாலை பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர்ப் புகைக் குண்டு மற்றும் தடியடிப் பிரயோகத்தில் இரண்டு இளைஞர்கள் காயமடைந்தனர்.

காயமுற்ற இளைஞர்களில் ஒருவர் தலையில் புகைக்குண்டு அடிபட்டதால் சிகிச்சைக்காக பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஓட்டமாவடிப் பிரதேசத்துக்கு தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் ஒருவரின் தேர்தல் பிரசாரத்துக்கெதிராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டதோடு பொலிஸார் மீது கற்களை வீசினர். இதன் காரணமாகவே கூட்டத்தைக் கலைப்பதற்கு பொலிஸார் புகைக்குண்டு, தடியடிப் பிரயோகம் மேற்கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வன்முறைச் சம்பவத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் ஏ.எம்.அஃமது லெப்பேயின் வீடும் தாக்குதலுக்குள்ளானது.

இதேவேளை, ஓட்டமாவடியில் நேற்று முன்தினம் இரவு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டுக்கு கைக்குண்டு வீசப்பட்டது.

அத்துடன், நேற்று அதிகாலை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்கள் பயணம் செய்த வாகனம் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# வாக்குச்சீட்டு அச்சிடும் பணி பூர்த்தியடையும் நிலையில்!

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணி பூர்த்தியடையும் கட்டத்தை அடைந்திருப்பதாக அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்தார்.

இதுவரை 21 மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணி முடிவுற்றுள்ளது. கொழும்பு மாவட்டத்திலும் 5 தேர்தல் தொகுதிகளுக்கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளன.

தற்போது கம்பஹா மாவட்டத்துக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணி இடம்பெற்றுவருகிறது. அது இன்றுடன் பூர்த்தியடையும்.

ஏற்கனவே அச்சிடப்பட்ட 14 மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் அனைத்தும் அந்தந்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமேல் மாகாணசபைத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணியும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

# கருணாவின் பிரச்சனையை எவரும் ஊக்குவிக்கக் கூடாது

## மிலிந்த மொறகொட

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் கருணாவின் முடிவால் ஏற்பட்டுள்ள பூசலை ஊக்குவிக்க எவரும் முற்படக்கூடாது என முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் மிலிந்த மொறகொட இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-

ஏதாவது ஒரு தரப்பினர் ஆவேசப்பட முற்படுவதே முரண்பாடுகள் ஏற்படுவதற்கு அடிப்படையாகும். விடுதலைப் புலிகளுக்குள் கருணாவின் நிலையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குள் தலையிடுவது பொருத்தமான விடயம் என நான் கருதவில்லை எனவும் மிலிந்த மொறகொட மேலும் தெரிவித்தார்.

# ராஜீவ் காந்தி கொலை! புத்தகமாக வெளிவருகிறது

## சி.பி.ஐ அதிகாரி எழுதுகிறார்

இந்தியப் புலனாய்வுத் துறையான சி.பி.ஐயின் முன்னாள் இயக்குநர் டி.ஆர்.கார்த்திகேயன், விரைவில் ராஜீவ்காந்தி கொலை தொடர்பான புத்தகம் ஒன்றை வெளியிடவுள்ளார்.

'உண்மையான வெற்றிப் பெருமிதம்' என்ற தலைப்பில் வெளியிடப்படவுள்ள இந்தப் புத்தகம் 270 பக்கங்களைக் கொண்டதாகும். இந்தப் புத்தகத்தில் ராஜீவ் காந்தி கொலை தொடர்பான விபரங்கள் ஆரம்பம் முதல் இறுதிவரை சுருக்கமான முறையில் விபரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகம் ஏககாலத்தில் இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் வெளியிடப்படவுள்ளது. ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட சிறப்பு விசாரணைப் பிரிவின் தலைமை அதிகாரியாக இருந்த கார்த்திகேயன், தனது விசாரணையில் கிடைத்த தகவல்கள் குறித்து இந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### கிளிநொச்சி...

இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்த ஆங்கில ஆசிரியரான ஈஸ்வரச் சந்திரன் (வயது 67) என்பவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இவர்கள் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரான அரசாங்க அதிபர் கே. கணேசை சந்தித்துப் பேச்சு நடத்தியபோது வன்னி மாவட்ட தேர்தல் பணிகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்தனர். குறிப்பாக இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் வாக்களிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் இவர்கள் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது.

(03)

## பிரதமர் ரணில் வவுனியா வருகிறார்

(வவுனியா)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று வவுனியா வரவுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் இன்று மாலை 3 மணியளவில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

(03)

## மாபியாக் குழுக்களுடனான தொடர்புகளை அமைச்சர்கள் துண்டித்துக்கொள்ள வேண்டும்!

### ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்க அமைச்சர்கள் மாபியா குழுக்களுடன் தொடர்புகளை வைத்துக்கொள்ளாமல் இருந்தால் பொலிஸார் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு இலகுவாக இருக்குமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற வர்த்தக பிரதிநிதிகளும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு இது அத்தியாவசியமானது. நாடு முழுவதும் மாபியா கும்பல்களின் நடவடிக்கைகள் தற்போது வியாபித்துள்ளன. இத்தகைய கும்பல்களுடன் தொடர்பு வைத்திருக்கும் அரசாங்க அமைச்சர்கள் இந்தத் தொடர்புகளைக் கைவிட்டால், பொலிஸாருக்கு சட்டத்தையும், ஒழுங்கையும் பேணுவதற்குச் சந்தர்ப்பம் தோன்றும்.

எனது கட்சியைச் சேர்ந்த ஒருவர் அத்தகைய கும்பலொன்றின் ஒத்துழைப்பைப் பெறுவாராயின் அந்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் தயங்கமாட்டேன் எனவும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

### சூனியப்...

டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டது.

நேற்று வடக்கு - கிழக்கு மாகாண தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் இடையே நடந்த கூட்டத்திலேயே இந்த யோசனை தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டது.

### வயது...

இந்தப் புனர்வாழ்வு நிலையம் யுனிசெவ் நிறுவனத்தின் ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்கள் மீண்டும் பெற்றோர்களுடன் இணைவதற்கும், கல்வி கற்பதற்கும், தமது வாழ்க்கையை நடத்துவதற்கு தேவைகளுக்கான திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சிகள் இங்கே வழங்கப்படும்.

## சொல்ஹெய்ம்...

நான் சொல்ஹெய்முடன் பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு இருந்தேன். ஆனால், அவர் என்னைச் சந்திக்கவில்லை. ஏன் என்னை சந்திக்காமல் தவிர்த்தது ஏன் என்று எனக்குத் தெரியும்.

யாழ்.குடாநாட்டில் எனது தேர்தல் பணிகளை ஊடகங்கள் மூலமே செய்துவருகின்றேன். எனது உயிருக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் உள்ளது எனவும் தெரிவித்தார்.

## பயிற்சி முகாமில்...

வழங்கிக்கொண்டிருந்த இராணுவ அதிகாரியும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் பயிற்சி வழங்கிக் கொண்டிருந்த இன்னுமொரு இராணுவ அதிகாரி படுகாயமடைந்தார். இவர் தற்போது கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தந்திரிமலைப் பொலிஸாரும், இராணுவத்தினரும் விசாரணைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

## இந்தியாவிலிருந்து அழைத்து...

எவரும் தொடர்புகொள்ளாத வகையில் வீட்டினுள் பூட்டிவைக்கப்பட்டிருந்தனர்.

தடுத்துவைக்கப்பட்டிருந்த 12 பேரும் வவுனியாவுக்குத் தப்பிவந்து மக்களின் உதவியுடன் வவுனியா அரசியற்துறை அலுவலகத்தில் தஞ்சமடைந்தனர்.

இவர்கள் அழைத்துவரப்பட்ட சம்பவம் தொடர்பாக கேட்டறிந்த விடுதலைப்புலிகள் சம்பவம் தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகளின்போது, ஒருவரைக் கைது செய்து கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைத்தனர்.

இவர்களை இங்குள்ள உறவினர்களிடமும், இந்தியாவிலுள்ள உறவினர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையில் தாம் ஈடுபட்டுள்ளதாக அரசியற்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தம்முடன் 40 இற்கு மேற்பட்ட தமிழ்பெண்கள் கடத்திவரப்பட்டதாகவும் இவர்கள் கூறியதாகத் தெரியவருகிறது.

தப்பிவந்த 12 பேரின் விபரங்கள் வருமாறு,

அருளானந்தம் நிசாந்தினி (வயது 16, முருங்கன்), அந்தோனி சாந்தி (வயது 21, வங்காலை), மகேந்திரன் சாந்தி (வயது 23, கணேசபுரம் கன்னாதிட்டி), தனராஜ் நிர்மலா (வயது 37, உயிலங்குளம் மன்னார்), எல்ராஜ் சசிகா (வயது 19, உயிலங்குளம், மன்னார்), சக்திவேல் ஆனந்தகுமாரி (வயது 22, வேப்பங்குளம், வவுனியா), சுப்பிரமணியம் சுகந்தினி (வயது 23, நிலாவெளி, திருமலை), அந்திரேஸ் நாகேஸ்வரி (வயது 30, ஜெயபுரம்), தங்கராசா முத்துலட்சுமி (வயது 40, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்), லோகேஸ்வரன் மகேஸ்வரி (வயது 20 வவுனியா), ஆறுமுகம் செல்வி (வயது 12, பெரியமடு மன்னார்), நாகராஜ் புஸ்பவதனி (வயது 25, பாலமோட்டை ஓமந்தை).

(03)

## இன்னொரு யுத்தத்தை...

படைய வைத்தார்.

இதனாலேயே 72 மணிநேரத்துக்குள்ளேயே மீண்டும் இராணுவத்தினர் கைப்பற்றிய பிரதேசங்களிலிருந்து விடுதலைப் புலிகளால் பின்வாங்கச் செய்யமுடிந்தது.

இன்று ஜனநாயகம் பற்றி பேசுகின்ற ஜே.வி.பியினர் முப்படைகளையும் சேர்ந்த 561 பேரையும், அவர்களது உறவினர்களையும் கோரமாகப் படுகொலை செய்து தமது இரத்த வெறியைத் தீர்த்துக் கொண்டவர்கள்.

இப்போது ஜே.வி.பியினர் தாம் சம்பளம் பெறுவதில்லை எனத் தெரிவித்துவருகின்றனர். இதனை எவரும் நம்பக்கூடாது. ஏனெனில், இலங்கை மக்களிடம் கொள்ளையடித்து கோடிக்கணக்கான நிதியை வெளிநாடுகளில் அவர்கள் வங்கிகளில் வைப்புச் செய்துள்ளனர். இதனால் கிடைக்கும் வட்டி மூலமே ஜே.வி.பியினர் ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றனர்.

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும் எனவும் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

(01)


தமிழ்மக்களின் குரல்
ஒன்றாக ஒலித்திட...
க.சுரேஷ் பிரேமச்சந்திரன்
X
1
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(சி-2266)
நீர்வேலி வாழ் பொதுமக்கள்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.